
# திருக்கோயில்

செப்டம்பர் 90 விலை:ரூ.3







தென்காசி அருள்மிகு உலகம்மை உடனுறை விசுவநாத சுவாமி ஆலயத் திருக்குட நீராட்டு விழா நிறைவுக்குப் பின் மண்டலாபிசேக விழாவும் சிறப்புற நிறைவேறியது. அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு வ.ராமதாஸ்ஐ.ஏ.எஸ். அவர்கள் திருப்பணிக் குழுத்தலைவர் திருமிகு பா.சிவந்தி ஆதித்தன் அவர்களுக்கு அறநிலையத்துறையின் சார்பில் நினைவுப் பரிசு வழங்குகிறார். பணியாளர் நிர்வாக சீர்திருத்தத் துறையின் அரசுச் செயலாளர் திருமிகு ஆர். சண்முக சிகாமணி ஐ.ஏ.எஸ். அவர்கள் உடன் உள்ளார்.



திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற பொது விருந்து விழாவில் அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு வ.ராமதாஸ் ஐ.ஏ.எஸ். அவர்கள் கலந்து கொண்டார்கள். பூந்தமல்லி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு மாசிலாமணி, தவத்திரு சுவாமி இராமதாசர், ஆலயத் துணை ஆணையாளர் திரு வே. முனியசாமி எம்.ஏ., பி.எல் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

முகப்பு

அரசினர் தோட்டம்
இயற்கை ஆலமரத்து விநாயகரும்
குறளகம் அருட்சக்தி விநாயகரும்
இவ்விதழ் முகப்பை அலங்கரிக்கின்றனர்.

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D

| மாலை: 32 | திருவள்ளுவர் ஆண்டு 2021 பிரமோதூத ஆண்டு புரட்டாசி<br>செப்டம்பர் 1990 விலை ரூ. 3-00 | மணி 9 |
|---|---|---|

திருக்கோயில் வாசகர்களுக்கு
அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

**உயர்திரு ஆணையர் அவர்கள்**
**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்

**சந்தா விவரம்**

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.

முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

பொருளடக்கம்

ஒற்றினால் ஒற்றிக் கொளல்
—மாண்புமிகு முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்

சைவசித்தாந்தத்தின் தலைமணி நூல் சிவஞானபோதம்
—ஆணையர் திருமிகு வ. ராமதாஸ் ஐ.ஏ.எஸ்.

ஆடல் காணீரோ திருவிளையாடல் காணீரோ
—கம்பன் கவிநயமணி வே. தியாகராசன்

தேவி கருமாரி மகத்துவங்கள்
—புலவர் பெ. இராச சுந்தரம்

மனிதன் என்பவன் தெய்வமாகலாம்
—பி.கே. பொன்னம்பலநாதன எம்.ஏ.

சித்திர பாரதம்
—செவ்வேள்

கந்தவேள் கருணை
—டாக்டர் திருமுருக கிருபானந்த வாரியார்

தொண்டை நாட்டு வைணவத்திருத்தலங்கள்
—நித்திலக்கோ

ஒன்றே குலம் ஒருவனே தேவன்
—திருமந்திரச் செம்மல் டி.வி. வெங்கடராமன் ஐ.ஏ.எஸ்.


கம்பரின் இராமாவதாரம்
—டாக்டர் த. அமிர்தலிங்கம்

வாசகர் எண்ணங்கள்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# ஒற்றினால் ஒற்றிக் கொள்க

மாண்புமிகு முதல்வர், முத்தமிழ் அறிஞர் **டாக்டர் கலைஞர்** அவர்கள்




தன் அமைச்சரிடம் கனிந்த அன்பு காட்டி வரும் மாமன்னன் ஒருவன் ஒரு நாள் சற்றுக் கடுமையாகப் பேசி அலட்சியப்படுத்திவிட்டான். அதற்குக் காரணமே அமைச்சரைப் பற்றி மன்னனிடம் ஒற்றன் தந்த தவறான தகவலேயாகும். அரசனுக்கு எதிராக அமைச்சர் சூழ்ச்சியில் ஈடுபடுகிறார் என்பதே, அந்த ஒற்றன் கண்டறிந்ததாக காவலனிடம் கூறப்பட்ட செய்தியாகும். நாடாளும் காவலனால் முதலில் நம்பத்தான் முடியவில்லை. அந்த ஒற்றனுக்கு அமைச்சரைப் பிடிக்காது என்பதும், அந்த வெறுப்பின் காரணமாக இப்படி ஒரு விபரீதப் பொய்யை அவன் விளைத்து அறுவடை செய்து வெற்றி கண்டுவிட்டான் என்பதும், மன்னனுக்குத் தெரியவில்லை. தன் சினம் கண்டு தலைகுனிந்தவாறு வெளியேறிய அமைச்சரின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து கவனித்திட வேண்டுமென்று மன்னன் கருதினான். ஒற்றனை மீண்டும் அழைத்து அமைச்சரின் ஒவ்வொரு அசைவினையும் மிகக் கூர்மையாக கவனித்திடுமாறு ஆணை பிறப்பித்தான். அதே ஒற்றன்தான்! அரசனுக்கும் அமைச்சருக்கும் பிரிவு உருவாக்கிடச் செயல்பட்ட அதே ஒற்றன்தான்; ஒற்றர்களும் மனிதர்கள்தானே! அவர்களிலும் சிலர் விருப்பு வெறுப்புக்கு ஆட்படுகிறவர்கள்தானே! அரசாணையை நிறைவேற்ற அந்த ஒற்றன் கிளம்பிவிட்டான். அவனை அனுப்பிய பிறகு அரசனுக்கு சிந்தனை வேகமாகச் சுழன்றது. அந்த ஒற்றன் கூறுவது உண்மைதானா என்று அறிந்திடவும், அவன் நேர்மையாகச் செயல்படுகிறானா என்று தெளிந்திடவும், அவனுக்கும் தெரியாமல் இன்னொரு ஒற்றனை அனுப்புவதே சாலச் சிறந்தது என்ற முடிவுக்கு வருகிறான். அவ்வாறே இன்னொரு ஒற்றனுக்குக் கட்டளையிடப்படுகிறது. முதல் ஒற்றன் பெயர் ஒதியன்! அடுத்து அனுப்பப்பட்டவன் பெயர் இனியன்.

அன்றிரவு அமைச்சர் இல்லத்துக்கு வெளியில் மாறுவேடத்தில் ஒதியன் உலவுகிறான். ஒதியனுக்குத் தெரியாமல் மாறுவேடத்தில் இனியனும் அந்தப் பகுதியில் திரிந்து கொண்டிருக்கிறான். அமைச்சர் மாளிகைக்குள் உரையாடுவது வெளியே கேட்கிறது. ஒதியனும் இனியனும் ஒருவரையறியாமல் வேறு வேறு இடங்களில் நின்று அந்த உரையாடலைக் காது கொடுத்துக் கேட்கின்றனர். அமைச்சரும் அவர் துணைவியும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அப்போது அமைச்சரின் மெய்க்காப்பாளன், மாளிகைக்கு வெளியே மாறுவேடத்தில் இருவர் பதுங்கியிருப்பது கண்டு உடைவாளை ஓங்கிப் பாய்கிறான். ஒற்றர்கள் காற்றைக் கிழித்துக் கொண்டு பறந்தோடி விடுகிறார்கள்.

மறுநாள் காலை, மன்னனை ஒதியன் சந்திக்கிறான். ''என்ன நடந்தது? என்ன நடக்கிறது?'' எனக் கேட்கிறான் மன்னன்.

''தங்களை எதிர்ப்பது என்று அமைச்சர் முடிவு செய்து அதற்கு ஒப்பானது எதுவுமில்லையென்று தன்னுடைய மனைவியிடம் கூறியதை என் காதுகளாலேயே கேட்டேன்'' என்கிறான் ஒதியன்.

''சரியாகச் சொல்! என்ன வார்த்தைதனைக் கூறினார்?''



''அடுத்தூர்வது அஃதொப்பது இல்'' என்று அமைச்சர் தன் துணைவியிடம் கூறினார். அதற்குப் பொருள்! நெருங்கி எதிர்ப்பதற்கு ஒப்பானது வேறு எதுவுமில்லை என்பது தானே அரசே!'' என ஒதியன் உருக்கமுடன் கூறியதும், மன்னன் உரக்கச் சிரித்துவிட்டான் அந்தச் சிரிப்புஒலி அடங்குவதற்குள் இனியனும் அங்கு நுழைந்துவிட்டான்

''என்ன இனியா? என்ன அறிந்து வந்தாய்?''

''அரசே! அமைச்சரின் துணைவியார் அமைச்சரைப் பார்த்து; 'உங்களுக்கு இப்படி ஒரு துன்பம் வந்ததே! மன்னரே உங்களைச் சந்தேகித்துச் சோதிக்கும் சூழ்நிலை ஏற்பட்டு விட்டதே!'' என்று வருந்தினார். அதற்கு அவர் ஆறுதல் கூறும் பொருட்டு

''இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்.''

என்ற குறளைக் குறிப்பிட்டார்.

மன்னன் மீண்டும் சிரிக்கத் தொடங்கினான். பிறகு ஒதியனிடம் உறுமினான்;

''ஒதியா! துன்பம் வந்தால் கலங்காமல் இருந்து அந்தத் துன்பத்தை எதிர்த்து வென்றிட வேண்டும் என்ற குறளின் கருத்தைக் கூறியிருக்கிறார் அமைச்சர். நீ, அவர் மீது கொண்டுள்ள வெறுப்பின் காரணமாகப் பாதிக் குறளைப் பயன்படுத்தி எனக்கும் அவருக்கும் பகைமூட்டப் பார்க்கிறாய்! உன்னைப் போலவும் சில ஒற்றர்கள் உளர் என்று அறிந்துதான் வள்ளுவர், ஒரு ஒற்றன் தெரிந்து வந்து சொன்ன செய்தியை, மற்றொரு ஒற்றனை விட்டு அறிந்து வரச் செய்து ஒப்பிட்டுப் பார்த்து உண்மை காண வேண்டும்'' என்று கூறியிருக்கிறார்.

''ஒற்றொற்றித் தந்த பொருளையும்
மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல்''

இந்தக் குறள்தரும் அறிவுரையைக் கேட்டதனாலன்றோ உன் தவறு எனக்குப் புரிந்தது? ஓடு; என்முன் நில்லாதே! இனியா! இப்போதே சென்று அமைச்சரை நான் அன்புடன் அழைத்ததாகக் கூறி அழைத்துவா!''

இனியனும் அமைச்சரை அழைத்திடச் சென்றான். மன்னனும் இன்முகத்துடன் அமர்ந்தான்.

**--மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் ''குறளோவியக்'' காவியத்திலிருந்து இக்கருத்தோவியம் நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.**

# சைவசித்தாந்தத்தின்

# தலைமணி நூல்

# சிவஞான போதம்

## ஆணையர் திருமிகு வ. ராமதாஸ் ஐ.ஏ.எஸ்



''ஞானநூல்தனை ஓதல், ஓதுவித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல், தான் கேட்டல்
நன்கு
ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவனை அடைவிக்கும் எழில்ஞான பூசை'

என்று சிவஞான சித்தியார் நூலில் அருள்நந்தி சிவாச்சாரிய சுவாமிகள் இத்தகைய செம்பொருள் விளக்க விரிவுரைகளை ''எழில்ஞான பூசை'' என்று சிறப்பித்துப் போற்றி இருக்கிறார்.

நம்முடைய சைவ சமயத்தில் தோத்திர நூல்களான பன்னிரு திருமுறைகளும், சாத்திர நூல்களான சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கும் ஈசனாரின் இருகண்களைப் போலச் சிறப்பித்துப் பேசப்படுகின்றன என்பதை நாம்நன்கு அறிவோம். சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கில் தலைமணியாகப் பொற்றப்படுவது இன்றைக்கு இங்கே விரிவுரைக்குப் பொருளாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் சிவஞான போதமே யாகும்.

சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு

1. திருவுந்தியார்
2. திருக்களிற்றுப் படியார்
3. சிவஞானபோதம்
4. சிவஞான சித்தியார்
5. இருபா இருபஃது
6. உண்மை விளக்கம்
7. சிவப்பிரகாசம்
8. திருவருட்பயன்
9. வினாவெண்பா
10. போற்றிப் பஃறொடை வெண்பா
11. கொடிக்கவி
12. நெஞ்சுவிடுதூது
13. உண்மை நெறிவிளக்கம்
14. சங்கற்ப நிராகரணம்

இப்பதினான்கு சித்தாந்த சாத்திரங்களில் சைவசித்தாந்தத்தின் தலைமணி நூல் என்று போற்றப்படும் பெருஞ்சிறப்பினைப் பெற்றது மெய்கண்டதேவ நாயனார் அருளிச் செய்த சிவஞானபோதமே யாகும்.


அன்பிற்குரிய இனிய இவ்விழாவைத் துவக்கி வைக்க வந்திருக்கும் அரசுப் பணியாளர் நிர்வாக சீர்திருத்தத் துறையின் செயலாளர் அவர்களே! அங்கயற்கண்ணம்மை இசைச்சங்கத்தின் சார்பாக இப்பயன்மிகு சிவஞான போதச் செம்பொருள் விளக்கவுரைக்கு ஏற்பாடு செய்திருக்கிற அதன் தலைவர் சிவத்திரு நல்ல குருந்தப்ப சுவாமிகள் அவர்களே! மெய்யன்பர்களே! தாய்மார்களே! நண்பர்களே! ஓதுவாமூர்த்திகளே!

திருச்செந்தூர் அப்பர் அருட்பணி மன்றச் செயலாளர் சிவத்திரு பூமணி அவர்கள் சிறப்பு மிகுந்த இந்த சிவஞான போதச் செம்பொருள் விரிவுரைகளை இன்று தொடங்கி வரும் 31-8-90 முடிய 12 நாட்கள் தொடர்ந்து ஆற்றிட இருப்பதற்கு, என் மகிழ்ச்சி நிறைந்த வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது ஆலயங்களில் பக்தர்கள் வழிபாடியற்றிப் பயன்கொள்ளும் வகையில் நித்திய, நைமித்திக பூசைகள் சிறப்பாக நடைபெறுவதோடு ஞானநூல்கள் அனைவரும் அறிந்து பயன் கொள்ளத்தக்க வகையில் இத்தகைய செம்பொருள் விளக்க உரைகளும் நிகழ்த்தப்பட வேண்டும் என்பது நம சமயசான்றோர்களின விருப்பமாகும்.

---

***மயிலை அருள்மிகு கபாலீஸ்வரர் ஆலயத்தில் சிவத்திரு பூமணி அவர்கள் சிவஞான போத விரிவுரைகளை ஆகஸ்ட் 20 முதல் 31 முடிய 12 நாட்கள் ஆற்றினார். ஆரம்ப நாளில் விழாவிற்குத் தலைமையேற்று நம் ஆணையாளர் அவர்கள் ஆற்றிய சிறப்புமிகு தலைமையுரை இங்கு திருக்கோயில் வாசகர்களுக்காக வெளியிடப்படுகிறது.***



''பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித
மெய்கண்ட நாதனருள் மேவுநாள் எந்நாளோ?''

என்று தாயுமானசுவாமிகள் மெய்கண்ட தேவ நாயனாரையும், அவர்தம் சிவஞான போதச் செழு மறையினையும் போற்றி உரைத்திருப்பதும் ஈங்கு நாம் எண்ணி மகிழ்தற்குரிய ஒரு சிறந்த செய்தி யாகும்.

நம் சைவ சித்தாந்தத்தின் முதலாசிரியர் சிவபெருமானே ஆவர். அவர் திருக்கயிலையில் தென்முகக் கடவுளாக இருந்து நந்தி பெருமானுக்கு உண்மை ஞானத்தை அருளினார். நந்தி பெருமானின் மாணாக்கர் சனற்குமார முனிவர். இவருடைய மாணாக்கர் சத்தியஞான தரிசிகள், அவருக்கு மாணாக்கர் பரஞ்சோதி மாமுனிவர். இவர்கள் யாவரும் திருக்கயிலையில் இருப்பவர்கள் ஆதலால் இவர்கள் அகச் சந்தனாசிரியர்கள் எனறழைக்கப்படுவர், இம்மரபு தட்சிணாமூர்த்தி வழி என்று பேசப்படுகிறது.

பரஞ்சோதி மாமுனிகள் ஒரு கால் வான் வழியாகச் செல்லுகையில் தமிழகத்தில் திருவெண்ணெய் நல்லூரில் ''சுவேதவனப் பெருமாள்'' என்னும் பிள்ளைத் திருநாமத்துடன் எழுந்தருளியிருந்த தெய்வ அருட் பிள்ளையைக் கண்டார். அச்சுதக் களப்பாளரின் அருந்தவப் புதல்வர் அவர். நீண்ட காலமாக மகப்பேறு வாய்க்கப் பெறாத அச்சுதக் களப்பாளர் திருமுறையில் கயிறு சாத்திப் பார்த்தபோது

''பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடு
உள்ளநினைவு
ஆயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்டா ஒன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு
முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம்
தீவினையே''

என்ற திருஞானசம்பந்தரின் திருப்பாட்டு கிடைத்தது. அச்சுதக் களப்பாளரும் அவர்தம் வாழ்க்கை துணைவியாரும் திருவெண்காடு சென்று முக்குள நீராடி முன்னவனைத் தொழுது திருவெண்காடர் எனப்பெறும் சுவேதவனப் பெருமான் திருவருளால் தெய்வப் பிள்ளையைப் பெற்றனர். ஆதலால், குழந்தைக்கும் சுவேதவனப்பெருமான் எனப் பெயரிட்டு வளர்த்தனர். முதிர்ந்தபக்தியோடுதிருமுறை முற்றோதிக்கொண்டிருந்த அந்த குழந்தையைக் கண்டதும்தான் வான் வழியாகச் சென்று கொண்டிருந்த பரஞ்சோதி மாமுனிவர் கீழிறங்கிக் குழந்தைக்கு நந்தி உரைத்தருளிய ஞானநூல் தன்னை நவின்றருளினார். ''மெய்கண்டார்'' எனும் தீட்சா நாமத்தையும் சூட்டி அருள்புரிந்து விடை பெற்றுச் சென்றனர்.

பரஞ்சோதி முனிவரால் மெய் ஞானம் உபதேசிக்கப் பெற்ற மெய்கண்டதேவ நாயனார் சித்தாந்த நூல்களுள் தலைமணி நூலாகத் திகழும் சிவஞான போத நூலை அருளிச் செய்தார். பன்னிரு திருமுறைகளுக்கு இலக்கணமான பன்னிரு சூத்திரங்களை நாற்பதே வரிகளில் எடுத்தினிதே உபதேசிக்கிறார் மெய்கண்டதேவர். இந்நாற்பது வரிகளும் 216 சொற்களால், 624 எழுத்துக்களால் அமைந்து விளங்குகின்றன. சிறிய கண்ணாடியில் பெரிய மால்வரைப் பொருள் முற்றும் நிழலுருவாகக் காண்பது போன்று பன்னிரண்டே சூத்திரங்களில் மெய்நூற்பொருள் அனைத்தையும் தெள்ளத் தெளிவாக நமக்கு அருளி உரைத்திருக்கும் மெய்கண்ட தேவர் புறச் சந்தனாசிரியர்களில் முதல்வராகப் போற்றப்படுகிறார். மெய்கண்டதேவர் அருள் நந்திதேவருக்கு உபதேசித்தார். அருள்நந்தி தேவர் மறைஞான சம்பந்தருக்கு உபதேசித்தார். அவர் உமாபதி சிவத்திற்கு உபதேசித்தார். இந்நால்வரும் நிலவுலகில் தோன்றி விளங்கிய சந்தானசாரியார்கள் ஆதலால் ''புறச் சந்தனாசாரியர்கள்'' என்று

வழங்கப்படுகின்றனர். இவர்தம் மரபு ''பரஞ்சோதி முனிவர் மரபு'' என்று வழங்கப்பெறும்.

சைவ சித்தாந்தத்தில் முடிந்த முடிபாகக் கொள்ளப்படும் பதி, பசு, பாசம் எனனும் முப்பொருள் உண்மைகளைத் தெளிவுபடுத்துவதே சிவஞானபோதம் எனும் மெய்கண்ட சாத்திரம் ஆகும். பதி என்பது இறைவன், கடவுள்; பரமான்மா எனப்படுவதும் இதுவேயாகும். பசு என்பது ஆன்மா, உயிர், சீவான்மா எனப்படுவதும் இதுவே. பாசம் என்பது தளை, அதாவது உயிரைப் பிணித்துள்ள கட்டு. இவை தமிழில் முறையே இறை, உயிர், தளை என்று சொல்லப்படும்.

''பதி, பசு, பாசம் எனப்பகர் மூன்றின்
பதியினைப் போல் பசு பாசம் அநாதி''

என்று கூறுகிறது திருமூலரின் திருமந்திரம். பதியாகிய இறைவன் என்று தோன்றினானோ அன்றே பசுவாகிய உயிரும், அவ்வுயிர்களைப் பிணித்துள்ள பாசமும் தோன்றியுள்ளன என்பது சைவ சித்தாந்தத்தின் முடிந்த முடிபான கொள்கையாகும். இம்முப்பொருள் உண்மையை நமக்குத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டும் ஒப்பற்ற சித்தாந்த தலைமணி நூல்தான் சிவஞான போதம்.

சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்பதை நமக்கு சிவஞானபோதம் எடுத்துக் காட்டுகிறது.

''நூறு கோடி பிரமர்கள் நொந்தினார்
ஆறுகோடி நாராயணர் அங்ஙனே
ஏறுகங்கை மணல் எண்ணில் இந்திரர்
ஈறு இலாதவன் ஈசன் ஒருவனே''

என்பது அப்பர் தேவாரம். இதுகாறும் நூறு கோடி பிரம்மாக்களும், ஆறுகோடி நாராயணரும் தோன்றி மறைந்துவிட்டுள்ளனர். கங்கைக் கரையின் மணல் அளவு எண்ணிக்கையைக் கொண்ட இந்திரர்களும் தோன்றி மறைந்துள்ளனர். முடிவில்லாத முழு முதற்பொருளாக சிவபெருமான் ஒருவரே திகழ்கிறார் என்பதை அப்பர் பெருமானின் தேவாரம் இயம்புகிறது. சிவஞான போதமும் முதற் சூத்திரத்திலேயே முழுமுதற் பொருளாக சிவபெருமான் ஒருவரே திகழ்வதை நமக்குத் தெளிவுபடுத்துகிறது.

''அவன், அவள், அது எனும் அவை
மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்''

இது சிவஞான போதத்தின் முதற் சூத்திரம். ஆண்பால், பெண்பால், ஒன்றன்பாலாக உள்ள பொருள்களின் ஒரு தொகுதிதான் இந்த உலகம். இவ்வுலகம் தோன்றுதல், இருத்தல், மறைதல் என்னும் மூன்று தொழில்களுக்கு உட்பட்டுத் தோன்றுகிறது. உயிர்கள் வாழநிலைக்களனாய் இருக்கிறது. பின் மறைகிறது. அழித்தல் தொழிலைச் செய்பவரே உலகத்திற்கு முழு முதற் கடவுளர் ஆவார். அந்தத்தைச் செய்யக்கூடிய கடவுளே ஆதிகடவுள் என்பது இம்முதற் சூத்திரம் தெளிவுறுத்தும் பொருளாகும். எவ்வளவு ஆழமான கருத்தை மூன்றே மூன்று வரிகளில் உள்ளடக்கி எவ்வளவு நுட்பமாகத் திட்பமாக எடுத்து மொழிகிறது பாருங்கள் நம் சிவஞான போதச் செழுமறை நூல்.

## பாம்புகள் ஜாக்கிரதை!

**விஷப் பாம்புகள் வசிக்கும் வீட்டில் வசிப்பவர்கள் எப்போதும் மிக ஜாக்கிரதையுடன் இருப்பதைப் போல, உலகில் வாழும் மக்கள் காமத்திற்கும், பண ஆசைக்கும் ஆட்படாமல் எப்போதும் மிக மிக ஜாக்கிரதையுடன் இருக்க வேண்டும்.**

*—இராமகிருஷ்ணப் பரமஹம்சர்.*

இறைவன் திருவருளை நமக்குணர்த்த குருவருள் வேண்டும். குரு மன இருளைப் போக்கும் ஞானவிளக்கு போன்றவர். கண்கள் மட்டுமே ஒரு காட்சியைக் காண போதுமா என்றால் போதாது. வெளிச்சம் தரும் விளக்கோ, கதிரவனோ இருந்தால்தான் நாம் ஒரு பொருளைத் தெளிவாகக் காண முடியும். அந்த விளக்கினைப் போல ஒளி கூட்டுபவரே குருநாதர், மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்கள் வேடுவர்கள், அவ்வேடுவர்களிடம் அகப்பட்டு அல்லற்படுகிறது உயிர். குரு தம் உபதேசத்தால் உயிருற்ற துன்பத்தைத் துடைக்கிறார். இறைவனை அடையும் வண்ணம் பரிபக்குவம் செய்கிறார். இத்தகைய குருநாதரின் சிறப்பைச் சொல்வது நம் சிவஞான போதம்.

''ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய் தவத்தினில் உணர்த்தவிட்டு
அந்நியம் இன்மையில் அரன்கழல் செலுமே''

என்பது சிவஞானபோதத்தின் எட்டாவது சூத்திரம்.

உயிரைப் பற்றியிருக்கும் பாசக் கட்டிலிருந்து உயிர் விடுபட குருநாதர் திருவைந்தெழுத்தை ஓதி பரிபக்குவம் செய்கிறார். திருவைந்தெழுத்தின் பெருமையை நம்முடைய சமய குரவர்கள் நமக்கு மிகவிரிவாகவே எடுத்துக் கூறியிருக்கிறார்கள. நமசிவாயப் பதிகங்களை அவர்கள் பாடி நமக்கு வழிகாட்டியிருக்கிறார்கள். ''நாவினுக்கு அருங்கலம் நமசிவாயவே'' என்பது அப்பர் அருள்வாக்கு. ஆகாயம் முட்டும் அளவிற்கு விறகுகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தாலும் வெவ்வழல் அதை எரித்து உண்டு சாம்பலாக்கி விடுகிறது அல்லவா! அதைப் போலவே ஆகாமியம், பிராரத்தம், சஞ்சிதம் முதலான வினைகள் அனைத்தையும் நீறுபடுத்த வல்லது திருவைந்தெழுத்து மந்திரம.

''விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை ஒன்றும் இலையாம்
பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமசி வாயவே''

என்னும் திருநாவுக்கரசர் தேவாரம் எவ்வளவு அருமையாக நமசிவாய மந்திரத்தின் பலனைக் கூறுகிறது!

உயிர்கள் மீளவும் மீளவும் பிறவித்துயர் கொள்ள காரணம் இருவினை பாசமும், மும்மலக் கல்லும் என்று மொழிவார் சேக்கிழார் பெருமான். உயிர்களைப் பிறவியாகிய பெரிய கடலிலிருந்து

கரையேற்ற வல்லது நமசிவாய மந்திரமே. அப்பர் சுவாமிகள் புறச்சமயமான சமணத்திலிருந்து தாய்ச்சமயமான சைவசமயத்திற்குத் திரும்பி விட்டதைப் பொறுத்துக் கொள்ள முடியாத சமணர்கள் அப்பரைக் கல்லுடன் சேர்த்து கயிறுகளால் இறுகக் கட்டிக் கடலில் வீசிவிடுகிறார்கள். அக்கல்லே தெப்பமாக மிதக்கக் கடலில் மிதந்து கரையேறி விடுகிறார் அப்பர் பெருமான். 'சொற்றுணை வேதியன்' எனத் தொடங்கும் நமசிவாய பதிகத்தை அப்பர் பாட அவ்வற்புதம் நிகழ்கிறது. இக்காட்சியைப்பாடும் சேக்கிழார் பெருமான் இருவினை பாசமாகிய கயிற்றில், மும்மலமாகிய கல்லையும் சேர்த்து உயிர்கள் கட்டப்பட்டிருந்தாலும் அவர்களைப் பிறவிக் கடலிலிருந்து கரையேற்றவல்லது நமசிவாய மந்திரம் என்றால், கல்லுடன் சேர்த்துக் கட்டப்பட்ட அப்பர் பெருமான் கரையேறுவது என்ன அதிசயமா என்று வினவுகிறார்.

''இருவினைப் பாசம் மும்மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில் வீழ் மாக்கள் ஏறிட
அருளும் மெய் அஞ்செழுத்து அரசை இக்கடல்
ஒருகல்மேல் ஏற்றிடல்உரைத்திடல் வேண்டுமோ?''

இது பெரிய புராணப்பாடல்.

புல்லாகிப் பூடாகிப் புழுவாய் மரமாகி, பல்வகை மிருகமாகி, பறவையாகிப் பாம்பாகி, மனிதராகி, பேயாய், கணங்களாய், அசுரராய், முனிவராய், தேவராய் இவ்வாறு எத்தனை எத்தனையோ பிறவிகள் உற்றுப் பெருந்துயர் காணும் உயிரைப் பிறவிக் கடலிலிருந்து இறைவன் திருவடிக்குச்சேர்ப்பிப்பது திருவைந்தெழுத்தாகிய திருமந்திரமே.

''சிவாயநம என்று சிந்தித்து இருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை உபாயம்
இதுவே மதிஆகும், அல்லாத எல்லாம்
விதியே மதிஆய் விடும்''

என்ற பாட்டில் ஔவையார் திருவைந்தெழுத்தால் விதியையும் நாம் வென்றுவாழ முடியும் என்று கூறியுள்ளார்.

அத்தகைய திருவைந்தெழுத்தின் சிறப்பினை 'தண் நிழலாம பதி, விதி என்னும் அஞ்செழுத்தே' என்று செப்புகிறது சிவஞானபோதம். முறையாக அஞ்செழுத்தை ஓதி தண்நிழலாகும் இறைவன் திருத்தாளைச் சேரவேண்டும் என்று நமக்கு போதிப்பது சிவஞான போதம்.

கற்றார்கள் ஏத்தும் நம் கபாலீசுரவர், கோயில் கொண்டுள்ள திருமயிலையில்தான் ஆண்டுதோறும் அறுபத்து மூவர் திருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அடியார்களையும் ஆண்டவனாகப் போற்று வழிபாடு செய்தல் வேண்டும் என்ற அரிய கருத்தையும் நமக்கு மெய்கண்ட தேவரின் சிவஞான போதமே எடுத்துரைக்கிறது.

''செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரோடு மரீஇ
மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரன்எனத் தொழுமே''

அடியார் வழிபாடும், ஆலய வழிபாடும் மிகமிக அவசியம் என்பதை எடுத்துக் காட்டும் சிவஞான போதச் சூத்திரம் இது.

## பஞ்சாங்க நமஸ்காரம்

பஞ்சாங்க நமஸ்காரமாவது தலை கையிரண்டு முழந்தாளிரண்டு என்னும் ஐந்துறுப்பும் நிலத்திலே தோயும்படி வணங்குதல். கிழக்கு வடக்கே கால் நீட்டலாகாது. இவை மூன்று, ஐந்து ஏழு, ஒன்பது பன்னிரண்டு தரமாயினும் பெண்கள் செய்வர்.

(கொடி மரத்தின் உள் மண்டபங்களில வீழ்ந்து கும்பிடல் ஆகாது. திரும்பும போது சிவபெருமானுக்கும், இடபதேவருக்கும் புறங்காட்டாது திரும்பல் வேண்டும்.

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

---

சேக்கிழார் பெருமானும் இம்மயிலையம்பதியில் திருஞான சம்பந்தரின் திருப்பதிகத்தால் அங்கம் பூம்பாவை உயிர்பெற்றெழுந்த அற்புத நிகழ்ச்சியைப் பாடவரும்போது

''மண்ணில் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுதுசெய்வித்தல்
கண்ணால் அவர்நல் விழாப் பொலிவுகண்டு ஆர்தல்
உண்மையாம் எனில் உலகர்முன் வருக''

என்று பாடி அடியார் வழிபாட்டின் அவசியத்தைப் போற்றக் காண்கிறோம்.

ஆகவே மண்ணிலே பிறந்த நாம் பெறும் பயன் இறைவன் திருவடி சேர்வது, அதற்கு அடியார்களையும், ஆலய வழிபாட்டையும் போற்றுவது, குருவழியாக உபதேசம் பெறுவது, அவர் உபதேசிக்கும்திருவைந்தெழுத்தை தியானிப்பது ஆகிய பல்அருள் நெறிகளையும் நமக்குத் தெளிவுபட எடுத்துக் காட்டியிருக்கும் சைவ சித்தாந்தத்தின் தலைமணியான நூல் சிவஞானபோதமாகும். சிவஞான போதத்திற்கு மாதவ சிவஞான யோகிகள் பேருரையும் அருளியிருக்கிறார்கள். சிற்றுரையும் அருளியிருக்கிறார்கள். அவ்வுரைகள் யாவற்றையும் ஐயம் திரிபறக் கற்றுணர்ந்திருக்கும் திருச்செந்தூர் அப்பர் அருட்பணி மன்றச் செயலாளர் சிவத்திரு பூமணி அவர்கள் சிவஞான போதச் செம்பொருளை இங்கே உணராதார் உணரத், தெளியாதார் தெளிய 12 நாட்கள் எடுத்து விளக்க இருக்கும் அருட்பணி மிகப் போற்றுதலுக்குரியது. அவ்வகையில் அவரைப் பணிகொள்ளும் அங்கயற்கணம்மை இசைச் சங்கத்தின் திருவருட்பணியும் போற்றுதலுக்குரியது. கற்றார்கள் ஏத்தும் கபாலீச்சரத்தின்கண் சிவஞான போதச் செம்பொருள் விளக்கவுரை நிகழ்வது மேன்மைகொள் சைவநீதியைப் பரப்பும் அருட்பணியில் நமது ஆலயங்கள் கொண்டிருக்கும் பேரார்வத்தை—பெரும்பங்கைக் காட்டுகின்றன. அவ்வகையில் இச்சீரிய சிவஞான போதச் செம்பொருள் விளக்கவுரை இவ்வாலயத்தில் நிகழ்வதற்கு வேண்டிய அனைத்துதவிகளையும் செய்து தந்திருக்கும் ஆலய நிர்வாகிகளையும் பாராட்டுகிறேன். சிவனருட் செல்வர்கள் எல்லோரையும் நமது சிவத்திரு பூமணி அவர்களின் சிவஞான போதச் செம்பொருள் விளக்கவுரையை நுகர்ந்து பயன் கொள்ளுமாறு வேண்டி, இவ்வொப்பற்ற விழாவிற்கு தலைமை தாங்க திருவருள் கூட்டுவித்த அருள்மிகு கபாலீசுவரர், கற்பகாம்பிகை பொற்பாதங்களை வணங்கி யாவருக்கும் நன்றி கூறி அமைகிறேன் நன்றி வணக்கம். ▽▽▽

# சுதந்திரத்திருநாளில் பொது விருந்து விழா



"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" எனும் ஒப்பற்ற உண்மையை வலியுறுத்தி ஆண்டுதோறும் ஆலயங்களில் சுதந்திரத் திருநாள் அன்று சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடி வருகிறது போற்றுதலுக்குரிய நம் அறநிலைய ஆட்சித்துறை. தங்கசாலை அருள்மிகு ஏகாம்பரேசுவர் ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து விழாப் படங்கள் இவை. நிர்வாக அதிகாரி திரு ஈசுவரமுத்து, எம்.எ. மற்றும் ஊர்முக்கிய பிரமுகர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# இடல் காணீரோ திருவிளையாடல் காணீரோ

(1) **கம்பன் கவிஞயமணி வே. தியாகராசன்**

கோயில்களே இந்தியாவின் உயிர்நாடி. வானுற ஓங்கி வளர்ந்து சூரியனை முத்தமிடுவது போல் நிமிர்ந்து நிற்கும் மதுரைக் கோயில் கோபுரங்களின் பெருமையை யார்தான் அளவிட்டுக் கூற முடியும்? வேறு நகரத்திற்கு இல்லாத தனிச் சிறப்பு உலகத்திலேயே மதுரைக்கு மட்டும் உண்டு. சிவபெருமான் சோம சுந்தர பாண்டியன் என்றும், அம்மை பராசக்தி மீனாட்சி என்றும், முருகப் பெருமான் உக்கிர குமார பாண்டியன் என்றும் பெயர்கள் கொண்டு உலகில் அரசாட்சி செய்த பழம்பதி மதுரை. மூன்று தெய்வங்களும் தமிழின் மீதுள்ள அன்பினால் மதுரையை வந்தடைந்து வாழ்ந்தனர் என்றால் எம் தமிழின் சிறப்பை எவ்வாறு கூறுவது என்பர் குவலயம் போற்றும் குமர குருபர சுவாமிகள்.

தமரநீர்ப் புவன முழுதொருங் கீன்றாள்
    தடாதகா தேவியென்றொரு பேர்
தரிக்கவந் ததுவும் தனிமுத லொருநீ
    சவுந்தர மாறனா னதுவும்
குமரவேள் வழுதி உக்கிர னெனப்பேர்
    கொண்டதுந் தண்டமிழ் மதுரம்
கூட்டுண வெழுந்த வேட்கையா லெனிலிக்
    கொழிதமிழ்ப் பெருமையா ரறிவார்?

—மதுரைக் கலம்பகம்.

சிதம்பரம் தரிசிக்க முக்தி. காசியில் இறக்க முக்தி, திருவாரூரில் பிறக்க முக்தி. திருவண்ணாமலை நினைக்க முக்தி. மதுரை என்ற பெயரைக் கேட்டாலே முக்தி. மற்ற ஊர்களில் செய்த பாவங்கள் மதுரையில் வசிக்க நீங்கும். மதுரையிலிருந்து வேறு ஒரு தலத்திற்குச் சென்று புண்ணியம் தேடுவது, தேன் கலந்த பால் சோற்றைக் கையிலிட்ட காலத்து, அதைக் கீழே கொட்டிவிட்டு வெறுங்கையை நக்குவதை ஒக்கும் என்பர்.

'ஆதலினிப் பதிவிட்டுப் பிறபதியிற் போய்
        நோற்போ ரங்கை கொண்ட
சீதளவான முதேய்ப்பத் தித்திக்கத் தேம்பெய்து
        செய்த தீம்பால்
ஓதனத்தைக் கைவிட்டுப் புறங்கையை நக்குவா
        ரொப்பாரிந்த
மா்தலத்தின் பெருமைதனை யாவரே யளவிட்டு
        வழுத்தற் பாலார்''

ஒரு சமயம் பிரமதேவன் ஒரு தராசை எடுத்து ஒரு தட்டில் உலகிலுள்ள எல்லா சிவத் தலங்களையும் வைத்து மற்றொரு தட்டில் மதுரையை வைத்துத் தூக்க மதுரை மிகவும் கனத்தது. உயர்ந்தவன் என்றைக்கும் தனது எளிமையினால் தாழ்ந்தவன் போலத் தோன்றுவான் எனக் காட்டுகிறதல்லவா? கனமுள்ள தட்டுத் தாழ்வதும், கனங்குறைந்த தட்டு மேலே ஏறுவதும், தினமும் நாம் காணும் தராசில் கூட ஒரு தத்துவம்.

''கைத்தலநான் கிரண்டுடைய மலர்க்கடவுள்
        மேலொரு நாட் கயிலையாதி
எத்தலமு மொருதுலையிட் டித்தலமு
        மொருதுலையிட்டிரண்டும் தூக்க
உத்தமமாந் திருவால வாய்மிகவுங் கனத்தது.''

இத்தகைய பெருமை பொருந்திய மதுரையில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் உலகெங்கும் நிறைந்தவர். அது காரணமாகவே பிட்டுக்கு மண்சுமக்க வந்த அவரைப் பாண்டியன் பொற்பிரம்பு கொண்டு அடித்தபோது அந்த அடி உலகில் எல்லோர் மீதும் பட்டது.

''திறப்படு முலகமெங்கும் வியாபியாய்ச் சிறந்து
        நிற்கும்
அறப்பெருங் கடவுள் சோம சுந்தரன்
        அதனாலன்றோ
கறைக் கதிர் வடிவேற் றென்னன் கையிற்பொற்
        பிரம்பு பட்ட
புறத்தடித் தழும்பு மூன்று புவனமும் பட்டதன்றே''

ஒவ்வொரு தலத்திலும் மூர்த்தியோ, தீர்த்தமோ, அல்லது தலமோ பெருமையுடையதாயிருக்கும். மதுரை மூன்று பெருமைகளையும் உடையது.

''திருவால வாய்க்கிணையா மொருதலமும்
        தெய்வமணம்செய்ய பூத்த
மருவார் பொற் கமலநிகர் தீர்த்தமுமத்
        தீர்த்தத்தின் மருங்கின் ஞான
உருவாகி யுறைசோம சுந்தரன்போல் இகபரந்தந்
        துலவா வீடு
தருவானு முப்புவ்னத் தினுமில்லை உண்மையிது
        சாற்றின் மன்னோ.''

சிவராஜதானியாக் விளங்கிய அவ்வூரில்உள்ள தனவணிகர் வீடுகளில் கடைவாசற் கதவுகள்கூட தங்கத்தினால் செய்யப்பட்டு வைரத் தாழ்ப்பாள்கள் போடப்பட்டு இருந்தனவாம். நாட்டின் செல்வ மிகுதியை என்னவென்பது? மதுரைத்

தெருக்களில் இருந்த தூசிகள் கூடப் புண்ணியம் செய்தவை என்கிறார் பரஞ்சோதி.

''ஐய வென்னுரை வரம்பின வாகுமோ அடியர்
உய்ய மாமணி வரிவளை விறகு விற் றுழன்றோன்
பொய்யில் வேதமுஞ் சுமந்திடப் பொறாதகன்
றரற்றுஞ்
செய்ய தாண்மலர் சுமந்திடத் தவஞ் செய்த
தெருக்கள்.'

என்றவாறு அடியார்க்கு அருள் புரியும் ஆலவாயப்பன் ஒருநாள் விறகுத் தலையனாகவும் மற்றொரு நாள் மாணிக்க வியாபாரியாகவும், இன்னுமொரு நாள் வளையற்காரனாகவும் வந்தபோது அப்பெருமானின் திருவடிகளால் மிதிக்கப் பெற்ற பேறுள்ள புழுதி மதுரையிலுள்ள தெருப்புழுதி என்றால் சொக்க நாயகனின் பெருமையையும் மதுரையின் பெருமையையும் எவ்வளவு கூறமுடியும்? மதுரையையும் மதுரை நாயகனின் திருவிளையாடல்களையும் அறிந்து அவனருள் பெறுவோம்.

தாயும் தந்தையும் தெய்வமென்பதையும், தெய்வமுண்டு என்பதையும் நமக்குக் காட்டுபவர் குரு. அதனாலேயே குருவை முதல் தெய்வமாகக் கொள்வர் நம்முன்னோர். குருவருள் இன்றேல் இறைவன் திருவருள் கிட்டாது. குருவினை அவமதித்தால் பல கேடுகள் உண்டாகும். தீமையிலிருந்து நன்மைகள் சில விளைவதுண்டு. இந்திரன செய்த ஒரு தவறு உலகத்திற்குச் சோமசுந்தர லிங்கம் கிடைக்க உதவியது என்பது வரலாறு.

திரேதாயுகத்தில் தேவலோகத்தில் ஒரு நாள் பெண்களின் ஆட்டத்தை ரசித்துக் கொண்டிருந்த தேவேந்திரனைக் காண தேவகுருவான வியாழபகவான் வந்தனர். அவரை எதிர் கொண்டழைத்து உபசாரம் செய்யத் தவறினான் தேவராசன். பெண்ணாசை கொண்டவனுக்குப் புத்தியேது என்கிறார் பரஞ்சோதி.

''பையரா அணிந்த வேணிப் பகவனே அனைய
தங்கள்
ஐயனாம் வியாழப் புத்தேள் ஆயிடை அடைந்தா
னாகச்
செய்யதாள் வழிபா டின்றித் தேவர்கோன்
இருந்தான் அந்தோ
தையலார் மயலிற் பட்டோர் தமக்கொரு
மதியுண்டாமோ.''

தேவராஜன் தன்னை அவமதித்து விட்டான் என்பதைக் கண்டு வருந்திய தேவகுரு திரும்பிச் செல்ல, தேவராஜனுக்குத் தனது செல்வம் சிறிது சிறிதாகக் குறைந்ததாகத் தோன்றியது. குரு நிந்தையால் ஏற்பட்ட குறை இதுஎன எண்ணிய தேவராஜன் வியாழ பகவானை பல இடங்களிலும் தேடிக் காணக்கிடைக்காது சத்ய லோகத்தை அடைந்து பிரமதேவனிடம் நடந்தவற்றைக் கூறினான்.

''வியாழ பகவானை மீண்டும் கண்டுபிடித்து அடையும் வரை துவட்டா என்னும் அரக்கனின் மகனான திரிசிரசு என்பவனை, அரக்கர் குலத்தில் பிறந்தும், அறிவாளியாக விளங்கும் அவனைக் குருவாகக் கொள்'' என்று பிரமதேவர் கூறினார். தேவராசன் திரிசிரசு என்பவனை குருவாக ஏற்று, ஒரு யாகம் நிகழ்த்த, திரிசிரசு தேவர்கள் அழியவும் அரக்கர் மேன்மையடையவும் மந்திரம் கூற, கோபமடைந்த தேவராசன் தனது குலிசாயுதத்தால் திரிசிரசைக் கொன்றான். பிராமணனான திரிசிரசைக் கொன்ற பிரம்மகத்தி தோஷம் தேவராசனைப் பிடித்தது.

குரு நிந்தை செய்வோருக்கு எல்லாவிதமான துன்பங்களும் வரும்போலும். நல்லவனான பிரமதேவன் தேவேந்திரனை ஒரு அரக்கனைக் குருவாகக் கொள்ளுமாறு யோசனை கூறியதும் அதன் காரணமாக குரு என்ற பதவியிலிருந்து ஒருவனை தேவேந்திரன் கொன்றதும் குரு நிந்தையால் வந்த குற்றமன்றோ!

தேவர்கள் தமது தலைவனின் பிரம்மகத்தி தோஷத்தை மரம், மண், தண்ணீர் இவைகளின் மீது செலுத்தினர். பாவம் நீங்கியும் தேவராசனின் துன்பம் நீங்கவில்லை. திரிசிரசு தேவராசனால் கொல்லப்பட்டான் என்பதையறிந்த அவன் தந்தை துவட்டா என்பவன் ஒரு யாகம் செய்து, அந்த யாகத்தில் விருத்திராசுரன் என்பவனைத் தோற்றுவித்து, இந்திரனைக் கொல்லுமாறு ஏவினான். போர் மூண்டது. போரில் தேவராசன் தோற்று மூர்ச்சையானான். சிறிது நேரம் கழித்து மூர்ச்சை தெளிந்து எழுந்த இந்திரன், விருத்திராசுரனை வெல்ல என்ன செய்யலாம் எனப் பிரமனைக் கேட்க, பிரமன் திருமாலிடம் கேட்குமாறு கூறினார். திருமால் ''இந்திரா! உன்கையிலுள்ள வச்சிராயுதம் மிகப்பழைமையானது. அதுகொண்டு நீ அரக்கரை வெல்ல முடியாது. பாற்கடல் கடையும் காலத்துத் தேவர்களும் அசுரர்களும் ஆயுதங்களுடன் வந்தனர். ஆயுதங்களை நீக்கி வைத்து வருமாறு கூறினேன். இருசாராரும் ததீசி என்ற முனிவரிடம் தமது ஆயுதங்களைத் தந்தனர். வெகுகாலமாகியும் எவரும் அவரிடம்சென்று அவற்றைத் திரும்பக் கேட்கவில்லை. அவர் ஆயுதங்கள் யாவையும் விழுங்கித்தனது முதுகுத்தண்டில் வைத்துள்ளார். அவரிடம் சென்று அவரது முதுகெலும்பை யாசித்துப் பெற்று ஒரு வச்சிராயுதமாகச் செய்து விருத்திராசுரனை வெல்வாயாக!'' எனக் கூறினார். தேவர்கள் புடைசூழ தேவராசன் ததீசி முனிவரையணுக அவர் தேவராசனை அன்புடன் வரவேற்று யாது வேண்டுமெனக் கேட்டார். ''தாங்கள் மறுக்காது கொடுக்கக் கூடிய ஒன்றை யாசிக்க வந்துள்ளேன். அது தேவகுலத்தையே காக்க வல்லது''.

''அடிகள் நீர்மறாததொன்று அதனைவேண்டி இம்
முடிகொள் வானவரரொடு முந்திளேனது
செடிகொள்கார் இருளுடல் அவுணர்த் தேய்த்து
எமர்
குடியெல்லாம் புரப்பதோர் கொள்கைத் தாயது''.

''அது தங்களது முதுகெலும்பு'' என்று கூற ஞான முனிவர் தேவரது துயரத்தின் காரணத்தையும் அவர்கள் தன்னிடம் கேட்பது என்ன என்பதையும் அறிந்து ''நாயும் நரியும், தாயும் தந்தையும், பேயும் பிணியும், கடைசியில் யமனும் என்னுடையது எனச் சொந்தம் கொண்டாடும் இவ்வுடல் யாருக்குச் சொந்தம்?

''நாய் நமதெனநரி நமதெனப் பிதா
தாய் நமதென நமன் தனது எனப்பிணி
பேய் நம தெனமன மதிக்கும் பெற்றி போல்
ஆய் நம தெனப்படும் யாக்கை யாரதே''

என்று கூறித் தனது யோகத்தின் முயற்சியால் தனது உயிரை உடலிலிருந்து பிரித்தார். அவரது முதுகுத்தண்டை எடுத்து தேவேந்திரன் வச்சிராயுதம் செய்து கொண்டான். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர் எப்படிப்பட்டவர் என்பதைக் காட்டுகின்றதன்றோ ததீசி முனிவரின் செயல்!



வச்சிராயுதம் பெற்ற தேவேந்திரன் மீண்டும் விருத்திராசுரனை எதிர்க்க அவன் கடலுக்குள் சென்று ஒளிந்து கொண்டான். இது கண்ட தேவேந்திரன் தமிழ் முனிவரான அகத்தியரிடம் சென்று முறையிட்டான். அவர், ஏழு கடல்களையும் உளுந்தளவாகச் செய்து ஒரேதடவையில் ஆசமனம் (உட்குடித்தல்) செய்துவிட்டார். இறைவனது அருளைப் பெற்றவர் படைத்தல் காத்தல் அழித்தல்களாகிய முத்தொழில்களையே செய்வரே! கடலைப் பருகுவது என்ன பெரிய காரியம் என்கிறார் பரஞ்சோதி. மறைத்தல் காத்தல் ஆகிய மற்ற இரு தொழில்களும் இறைவனால் மட்டும் செய்ய முடியும் என்பது குறிப்பு.

''கைதவன் கரந்துவைகும் கடலை வெற்பு
அடக்கும்கையில்
பெய்துழுந்து எல்லைத் தாக்கிப் பருகினான்
பிறைசேர்சென்னி
ஐயனது அருளைப் பெற்றார்க்கு அதிசயம்
இதென்கொல் மூன்று
வையமுத் தொழிலும் செய்ய வல்லவர் அவரே
அன்றோ.''

கடலுக்குள் தவஞ் செய்து கொண்டிருந்த விருத்திராசுரன் மீது தனது புதிய வச்சிராயுதத்தை வீசி அவனைக் கொன்றான் இந்திரன். விருத்திராசுரனும் பிராமணன். ஆதலால் அவனைக் கொன்ற பிரம்மகத்தி தோஷம் தேவராசனைப் பிடித்தது. தேவராசன் தாமரை நூலுக்குள் சென்று ஒளிந்து கொண்டான். தேவர்கள் அரசனில்லாது தடுமாறி பூவுலகத்தில் ஆயிரம் முறைகள் பரிமேதமென்னும் அசுவமேத யாகங்களைச் செய்து முடித்த நகுஷன் என்பவனை அரசனாக்கிக் கொண்டனர். இந்திர பதவி கிடைத்ததால் ஆணவம் கொண்ட நகுசன் இந்திராணியை விரும்பினான். ''ஏழு மகரிசிகளால் சுமக்கப்பட்ட பல்லக்கில் எவன் ஏறி வருவானோ, அவன்தான் உன் கணவன். இவ்வாறு வரச்சொல்'' எனப்பெரியோர்கள் கூற, அம்மாதிரி வந்தால் அவனை ஏற்றுக் கொள்ளுவதாக இந்திராணி தூதனுப்பினாள். நகுசன் சப்தரிசிகளால் சுமக்கப்பட்ட பல்லக்கில் ஏறி வரலானான். பல்லக்கை சுமக்கும் பெரியோர்கள், தேவேந்திர பதவிக்கு மரியாதை காட்டும் முறையில் தெய்வீகமான அன்பைக் காட்டுவதற்காக, பல்லக்கைச் சுமக்கிறார்கள் என்பதைமறந்து, தனக்கு அவர்கள் அடிமைத்தொழில் செய்வதாக எண்ணங்கொண்டு, காமம் மனிதனைக் கட்டோடு அழித்து விடுமென்பதை மறந்து, இந்திராணியை விரைவில் சென்று காணவேண்டுமென்ற அதிகமான ஆவலால் தூண்டப் பெற்று ''சர்ப்ப! சர்ப்ப''! (வேகமாச் செல்லுக) என்றான். முன்கொம்பு தாங்கி நடக்கும் அகத்தியர் ''சர்ப்பமாகுக'' எனச் சாபமிட, நகுசன் மலைப்பாம்பாக மாறினான். பொறுமையில்லாத அற்பர்களுக்கு செல்வம் தவிர வேறு என்ன பகை வேண்டும்'' என்கிறார் பரஞ்சோதி.

''சர்ப்பமாகு என்முன் கொம்பு தாங்கிமுன்
நடக்கும் தென்றல்
வெற்பனாம் முனிவன் சாபம் விளைத்தன்
விளைத்தலோடும்
பொற்பமா சுணமே யாகிப்போயினான் அறிவிலாத
அற்பர் ஆனவர்க்குச் செல்வம் அல்லது பகைவேறு
உண்டோ?''

பின்னர் தேவர்களின் வேண்டுகோளுக்கு இரங்கியருளியதேவ குருவான வியாழ பகவான் தாமரையில் ஒளிந்திருந்த தேவேந்திரனைத் திரும்ப அழைத்தனர். ''தெய்வத்திற்குக் குற்றம் செய்தால் குரு பரிகாரம் கூறுவார். குருவிற்குச் செய்த குற்றத்திற்கு குருவேதான் பரிகாரம் கூறியருள வேணும்'' எனத் தேவேந்திரன் கூற, அவரது அறிவுரையின்படி, தேவராசன் கபிலை தரிசனம் செய்து பூவுலகிற்கு வந்து மற்ற புண்ணியபதிகளெல்லாம் சென்று வணங்கினான். கங்கை முதலான புனித நீர்களில் ஆடி, காஞ்சி காசி முதலானவற்றைத் தரிசித்து கடம்பவனம் (மதுரை) (பண்டைய காலத்தில் கடம்ப மரங்கள் நிறைந்த காடாக இருந்தது,) புகுந்த காலத்து, தன்னைப் பிடித்திருந்த பிரம்மகத்தி தோஷம் நீங்கியது கண்டான்.

பாறையிலே வெயில் தாங்காது ஒரு பாம்பு புரள அது கண்டு இரக்கமுற்று கருடன் தனது சிறகை விரித்து அதற்கு நிழல் பரப்ப, பறவையின் விரிந்த சிறகைக்கண்டு ஒரு குரங்கு, தனது சிறகுகளை மடக்க முடியாது கருடன் ஏதோ வியாதியால் வருந்துகிறது என எண்ணி இரக்கப்பட்டு, சங்கில் நீர் கொண்டு சிறகுகளில் ஊற்றியது கண்டான் தேவராசன்.

''நெளியராக் குருளைவெயில் வெள்ளிடையிற்
கிடந்துயங்கி நெளியப் புள்ளேறு
ஒளியராச் சிறை விரித்து நிழல் பரப்பப்
பறவைநோய் உற்றதே கொல்
அளியவா அச்சோ என்று ஓதி அயல்
மடமந்தி அருவி பூற்றும்
துளியநீர் வளைத்தசும்பின் முகந்தெடுத்துக்
கருங்கையினார் சொரிவ மாதோ.''

விரோதமுள்ள விலங்கினங்கள்கூட அன்புருவாக இருப்பது கண்டான். இங்கு ஏதோ தெய்வீகமிருக்க வேண்டும் என எண்ணிய தேவேந்திரன் அங்கிருந்தசிவலிங்கப்பெருமானைத் தனது ஆயிரங்கண்களாலும் கண்டுகளிப்படைந்து, பக்கத்தில் தங்கத் தாமரைகள் பூத்த குளமொன்றைக் கண்டு அதில் நீராடினான். அதுவே பொற்றாமரைக் குளம் எனப் பெயர் பெற்றது. தெய்வ தச்சனையழைத்து அழகிய விமானமொன்று அமைக்கச் செய்தான். எட்டுத் திக்குகளிலுள்ள யானைகள் அவற்றைத் தாங்கிய பின்னர் தேவேந்திரன் விதிப்படி அச்சிவலிங்கப் பெருமானைப் பூசித்தான். ''பூசையும் நீ! பூசைப் பொருள்களும் நீ! பூசை செய்யும் உடலும் நீ! பூசையை ஏற்றுக் கொண்டு பயன் தரும் தெய்வமும் நீ! பூசை நான் செய்தேன் என எண்ணும் பாக்கியத்தை அளிக்கும் உன் கருணையே கருணை''

''அங்கணா போற்றி! வாய்மை ஆரண போற்றி!
நாகக்
கங்கணா போற்றி! மூல காரணா போற்றி!
நெற்றிச்
செங்கணா போற்றி! ஆதி சிவபரஞ் சுடரே
போற்றி
எங்கள்நா யகனே போற்றி! ஈறிலா முதலே
போற்றி!''

என்றெல்லாம் தோத்திரம் செய்த தேவேந்திரனை நோக்கி, சிவபெருமான், ''என்ன வேண்டும்?'' என்று கேட்க, ''என்றும் நான் தேவரீரைப் பூசித்துக் கொண்டு இங்கேயே இருக்க வேணும்'' என்று வரம் கேட்டான் தேவேந்திரன். 'இந்திர! வேனிற் காலத்தில் சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரத்தில் பௌர்ணமியன்று என்னைப் பூசித்தாலும் வருடம் பூராவும் பூசனை செய்த பேறு பெறுவர். நீ அவ்வாறே செய்வாயாக!'' என இறைவன் அருளினார். இன்றும் சித்திரா பௌர்ணமியன்று மதுரையில் தேவேந்திரன் பூசை செய்வதாகக் கூறுவர் பெரியோர்.


தேவேந்திரன் பிரம்மகத்தி 'குரு' நிந்தனை முதலான குற்றங்களிலிருந்து நீங்கிச் சுகமாக வாழ்ந்தான். குரு நாதரான வியாழ பகவான் அவனது குற்றங்களை மன்னித்து அவன் பக்கத்திலேயே அவனுக்கு உறுதுணையாயிருந்தார். இந்திரன் துன்பமடைந்து சுகம்பெற்ற காரணமாக எல்லோருக்கும் ஒரு நாள் பூசை செய்து ஒரு வருட பூசையின் பலன் பெறுமாறு ஒரு பாக்கியம் கிட்டியது. எல்லாம் சொக்க நாயகனின் திருவருளே.

(தொடரும்)

## திருநீற்றின் பெருமை

உலகிலுள்ள பொருள்களை எரியில் சுட்டால் சங்கைத் தவிர மற்ற எல்லாம் பொருள்களும் கருமையாகிவிடுகின்றன. வெள்ளைத் துணியை வெள்ளைக் கடிதத்தை எரியில் இட்டால் கரியாகி விடுகின்றன. கரிய சாணத்தின் உருண்டையை எரியில் இட்டால் அது வெண்மையாகின்றது. கருமை வெண்மையாக மாறிய திருநீறு உள்ளக் கருமையை மாற்றி ஞானவொளியை நல்கும் தெய்வத்தன்மை வாய்ந்தது.

—டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்





# தேவி கருமாரி மகத்துவங்கள்

புலவர் பெ. இராசசுந்தரம், எம்.ஏ.,பி.எட்.,

திருவேற்காடு என்ற பெயர்வரக் காரணம் யாது?

திரு வேல் காடு— திருவேற்காடு.
வேல்— வேல் என்னும் ஆயுதம்
காடு— காடு.

பெருமை பொருந்திய வேல் பெற்ற காடு. என்று பொருள், வேல் பெறுதல்: முருகன், சூரபன்மாதிகளை வெல்வதற்காகத் திருவேற்காட்டிற்கு வந்து, அம்மையப்பனாகிய பரமனையும் பார்வதியையும் வேண்டினான். உடனே பரமன் திருக்கண்ணோக்கம் செய்யவும் பார்வதி மகிழந்து வேலினை முருகனிடம் அளித்தாள். எனவே, வேல் அளித்த காடு அல்லது வேல் பெற்ற காடு, வேற்காடு ஆயிற்று.

வெள்வேல மரம்: கருமாரி, திருவேற்காட்டில், வெள்வேல மரத்தின் கீழ் இரண்டு உருவமாய் (சிவை, நாரணி) அமர்ந்து அருளாட்சி செய்தாள். எனவே, வேல மரத்தின் பெயர் இவ்வூருக்குப பெயராகி வேல்-திருவேல் காடு-திருவேற்காடு எனவும் வழங்கப்பட்டு வருகிறது.

கருமாரி என்றால் என்ன பொருள்:? சப்த கன்னிகளில், ஏழாவது கன்னிதான் கருமாரி. (அந்தரக் கன்னி, ஆகாயக்கன்னி, பிராமணக்கன்னி, காமாட்சி, மீனாட்சி, விசாலாட்சி, கருமாரி)

க- பிரமன்,
ரு- ருத்திரனும், ருத்திரியும்
மா- திருமாலும், இலட்சுமியும்
ரி- ரீங்காரத்தில் உறையும் தேவி.

எனவே கருமாரி என்றால், பிரம்மனும், ருத்திரனும், ருத்திரியும், திருமாலும் இலட்சுமியும், ரீங்காரத்தில் உறையும் தேவி என்று பொருள்.

கருமாரியமமன் கோவிலில் ஞாயிற்றுக்கிழமை ஏன் சிறப்பு பெறுகிறது?

முன்பு ஒரு சமயம் சூரியன், திருவேற்காட்டிற்கு வந்து அன்னை கருமாரியை வேண்டித் தொழுதான். அதற்கவள், ''என்னவரம்வேண்டும்?'' என்று கேட்டாள். அதற்கு சூரியன், ''தாயே! எனக்குரிய நாளான ஞாயிற்றுக்கிழமையை, உனது திருநாளாக்கி நீடுழ் விளங்குமாறு வரம் அளிக்க வேண்டும்'' என்றான். அன்னையும் அவ்வாறே அளித்தாள். அதனால்தான், ஞாயிற்றுக்கிழமை சிறப்பு பெறுகிறது.

பாம்புப் புற்றின் வரலாறு யாது?

கருமாரி, திருவேற்காட்டில் அகத்தியருக்குப் காட்சி தரும்போது பின்வருமாறு கூறினாள். ''முனிவா! உலக மக்கள் உய்யும் பொருட்டு, நான் பாம்பு உருவம் கொண்டு புற்றில் அமர்ந்து யுகாந்த காலங்கள் அருளாட்சி செய்வேன். பிறகு கலியுகத்தில் திருக்கோவில் பெற்று விளங்குவேன்'' என்றாள். இந்த அடிப்படையில் அமைந்ததுதான் பாம்புப் புற்றாகும்.

கருமாரியம்மன் கோவிலில், சாம்பல் பிரசாதம் அளிப்பதின் காரணம் என்ன?

சிவபெருமான், வேற்கண்ணியுடன் (பார்வதி) அமர்ந்து அருளாட்சி செய்யும்போது தேவர்கள் அரக்கர்களால் தாக்கப்பட்டுத் துன்பம் அடைந்தனர்; சிவனை வேண்டினர். உடனே சிவபெருமான் இத்துன்பத்தைப் போக்கத் தேவலோசம் சென்றார். செல்லும் பொழுது பார்வதியிடம், தன் உடம்பில் உள்ள வெண்ணீற்றை (சாம்பலை) எடுத்துக் கொடுத்து, ''இத்திருநீற்றினால் ஐந்தொழிலைப் பூவுலகில் செய்து வருக, ''என்றார். அவ்வாறு அளித்த வெண்ணீற்றைத்தான் (சாம்பலை) பிரசாதமாகத் தருகின்றனர்.

கருமாரி கோவிலில் சீனிவாசப்பெருமாள் கோவில் அமைந்திருப்பதன் வரலாறு யாது?

ஆதியில், ஸ்ரீமந்நாராயணன் திருவேற்காட்டிற்கு வந்து கருமாரியைப் போற்றினார். அப்பொழுது அன்னை காட்சி தந்து பின்வருமாறு கூறினாள். ''அண்ணா! நீவிர் கலியுகத்தில் திருப்பதியில் ஸ்ரீநிவாசப்பெருமானாக இருக்கும்போது, எனக்குத் துணை புரியும் வகையில், என்னுடைய ஆலயத்திற்கு ஈசான பக்கத்தில் நின்று, தென்புலம் நோக்கியவண்ணம் இருந்து, அடியார்க்கு அருள்பாலிக்க வேண்டும்,'' என்றாள். ஸ்ரீமந்நாராயணரும் அவ்வாறே செய்தார்.

சாம்பர்ப் பொய்கையின் மகத்துவம் எனன?

திருவேற்காட்டில் கருமாரி அளித்த திருநீற்றால் (சாம்பலால்) முருகன் உலக மக்கள் உய்யும் பொருட்டுத் திருக்குளம் ஒன்று அமைத்தான். இதைக்கண்ட கருமாரி பின்வருமாறு கூறிலாள். ''பாலகனே! இச்சாம்பர்ப் பொய்கையில், ஆதிவாரத்தில் அதிகாலையில் நீராடித் திருநீறணிந்து, நான்கு பக்கமும் சாம்பலைத் தூவித்திருநீற்றைக் குளிர்ந்த நீரில் அருந்துவோர், எல்லா நலமும் அடைவார்கள். இதன் மகத்துவம் என்ன என்றால் பஞ்சமாபாதகங்களும் செய்தவர்களும் இதில் நீராடினால் பரிசுத்தம் பெறுவார்கள்'' என்றாள்.

வேலாயுத தீர்த்தம் என்பது என்ன?

வேலாயுத தீர்த்தம் என்பது, திருவேற்காட்டில் உள்ள வேதபுரீஸ்வரர் ஆலயத்திற்குப் பக்கத்தில் இருக்கும் கிணறு ஆகும். முருகன் திருவேற்காட்டில் பார்வதியிடம் பெற்ற ஞானவேலினால்,

பாவி நதியோரத்தில், கிழக்குப் பக்கத்தில் பூமியைத் தோண்டி, அத்தண்ணீரினால் அம்மையப்பனை அபிடேசித்தான். இவ்வாறு தோண்டப்பட்டதுதான், வேலாயுத தீர்த்தம் ஆகும்.

கருமாரி கோவிலில், ஆடிவார ஞாயிற்றுக் கிழமை கொண்டாடப்படுவதில் பொருள் யாது?

முன்பு ஒருசமயம், அகத்தியர் திருவேற்காட்டில் கரகம் அலங்கரித்து ஆடிவார ஞாயிற்றுக்கிழமையில், அன்னை கருமாரியைப் போற்றித் துதித்தார். அப்போதுஅன்னை காட்சிதந்து பின்வருமாறு கூறினாள். ''ஆடியில், ஞாயிற்றுக்கிழமைகளில் என்னைத் துதிப்பவர்கட்கு அனைத்து வரங்கள் தருவேன்; எல்லாக்கலிகளையும் தீர்த்துவைப்பேன்'' என்றாள். இதை முன்னிட்டுதான், ஆடிவார ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படுகிறது.

கருமாரி மீது ஐந்தலை நாகம் இருப்பதன் விளக்கம் என்ன?

முன்பு ஒரு சமயம், கருமாரியிடம் பஞ்ச பூதங்களும் வந்து, தாம் உய்வதற்காக ஒரு வரம் கேட்டன. அதற்கு அன்னை மகிழ்ந்து, அவற்றை ஐந்து நாகங்களாக்கி முடிமேல் இருக்குமாறு செய்தாள்.

கருமாரி அம்மன் கோவிலின் தலவிருட்சம் யாது?

வெள்வேலமரம், தலவிருட்சம் ஆகும்.

திருவேற்காட்டில், குறட் (குறி) உரைக்கும் வழக்கம் எவ்வாறு ஏற்பட்டது.?

ஒரு காலத்தில், கருமாரி கிழவி வேடம் பூண்டு கையில் பிரம்புடன் சூரியனிடம் சென்று, அவனுடைய கடந்தகால நிகழ்ச்சிகள் அனைத்தையும் கூறிக்கொண்டுவந்தாள். சூரியன், குந்தியைக் கன்னிப்பருவத்தில் கூடிய செய்தியையும் சொன்னாள். அதனால் சூரியன கோபம் கொண்டு, தன்தேரை அதிவேகமாகச் செலுத்தினான். உடனே, கிழவி மறைந்துவிட்டாள். பிறகு சூரியன், தன் ஞான திருட்டியால் வந்தவள் கருமாரி என உணர்ந்து, திருவேற்காட்டிற்கு வந்து, அன்னையை வேண்டினான்; மன்னிப்பு கோரினான். அன்னையும் மன்னித்தருளினாள். இந்த அடிப்படையில்தான் குறம் (குறி) கூறப்படுகிறது.

அம்மன் முடிமேல், பிறைச்சந்திரன் இருப்பதன் காரணம் என்ன?

சந்திரன், சிவனுடைய சடையில் இருக்கும் போது, தேய்பிறை வந்தது. அதனால் அவன் பயந்தான். அதைக்கண்ட பரமன் சந்திரனைப் பார்த்து ''சந்திரனே! கருமாரியைப் பணிந்து பூரணச் சந்திரனாக இருப்பாய். வளர்பிறை, தேய்பிறை மார்க்கம் உண்டாகி உயர்வடைவாய், '' என்றார். அவ்வாறே சந்திரன் கருமாரியை வேண்டவும், கருமாரி அவனை (மூன்றாம்பிறை) முடிமேல் ஏற்றாள்.

கருமாரிக்குச் சிங்கவாகனம் அமைந்ததின் வரலாறு யாது?

முன்பொரு சமயம், சண்முகன், தாரகனாகிய மாயையைச் சிங்கமாக ஆக்கித் தனக்குப் பணி செய்யுமாறு ஆணையிட்டான். ஆனால், அச்சிங்கம் கருமாரியின் பெயரைச் சொல்லிக்கொண்டு திருவேற்காட்டை நோக்கி ஓடி வந்தது. உடனே அன்னை கருமாரி அதற்கு அபயம் அளித்து, அதனையே தன் வாகனமாக ஏற்றுக்கொண்டாள்.



திருவேற்காட்டில் தைப்பூசம் கொண்டாடக் காரணம் என்ன?

அகத்தியர், திருவேற்காட்டில் தைமாதத்தில், பூசமும், பௌர்ணமியும் கூடிய ஆதிவாரத்தில், அதிகாலையில் நீராடிக் கருமாரியைத் துதித்தார். கருமாரி காட்சி தந்து, ''அகத்தியா! நீ அருளும் ஞானமும் அளிக்கும் தமிழில் புலமை பெற்றுத் தமிழை வளர்ப்பாயாக,'' என்று கூறினாள். எனவே, இதையொட்டித் தைப்பூசம் கொண்டாடப்படுகிறது.

சித்திரா பௌர்ணமி விழா, ஏன் திருவேற்காட்டில் கொண்டாடப்படுகிறது.?

முத்துவீரன் ஒரு சமயம், கருமாரியிடம் ஒரு வரம் கேட்டான். அந்த வரம் என்னவென்றால், அவன் எந்த நேரத்திலும் கருமாரி அருகில் நின்று பணிபுரியும் வரம் கேட்டான். அன்னையும் தந்தாள். அவள் மேலும் அவனுக்கு, ஒரு வீரவாளும் தந்தாள். வாளைப்பெற்றுக் கொண்ட முத்துவீரன் சித்திரைப் பௌர்ணமியில், முனிபுங்கவர்களின் ஆசியுடன் குதிரை மீது அமர்ந்தான். இந்த அடிப்படையில், சித்திரை பௌர்ணமி விழா நடைபெறுகிறது.

முத்துவீரசுவாமி, காத்தவீரசுவாமி ஆகிய இருவரும் கருமாரி கோவிலில் காணப்படுவதன் காரணம் யாது?

இவ்விருவரும், காவல் தெய்வமாக அமைக்கப்பட்டிருக்கிறார்கள்.

கருமாரிக்குரிய கொடி யாது?

கருமாரிக்குரிய கொடி, கும்பக்கொடி ஆகும்.

குறிப்பு: மேற்கண்ட செய்திகளுக்கு ஆதாரநூல், ''ஸ்ரீதேவி கருமாரியம்மன் புராணம்'' ஆகும்.



# மனிதன் என்பவன் தெய்வமாகலாம்

**P. K. பொன்னம்பலநாதன், எம்.ஏ.,**

உலகில் அரியது எது என்று வினவினார் முருகர் ஔவையைப் பார்த்து. ஒரு கணம் யோசித்தார் ஔவைப்பிராட்டி. 'அரிது அரிது மானிடர் ஆதல் அரிது' என்று பதில் தந்தார். இது முற்றிலும் உண்மையே.

''எண்ணரிய பிறவிகளில் மானிடப் பிறவிதான்
யாதினும் அரிதரிது காண்''

என்பது தாயுமானார் வாக்கு.

இறைவன் படைத்தருளிய எழுவகைப் பிறவிகளில் மனிதப் பிறவியே உயர்ந்தது. ஏழு பிறப்புகளாவன:—

தாவரம், நீர் வாழ்வன, ஊர்வன, பறவை, விலங்கு, மக்கள், தேவர்,.

பறவைகளும் மிருகங்களும் தாம் எதற்காக வாழ்கிறோம் என்று நினைத்துப் பார்க்கத் தெரியாதவை. நல்லது எது, கெட்டது எது என்று பகுத்தறிந்து நல்லனவே செய்யும் சக்திஅவற்றுக்கு இல்லை. மனிதனுக்கு மட்டுமே பகுத்தறிவு உண்டு. ஆதலால்தான் மனிதப்பிறவி மாண்புடையது என்போம். இவ்வுயர்ந்த பிறவியை எய்திய மக்கள் சிந்தனைத் திறன் வாய்க்கப் பெற்றவர்கள். ஆதலால் இந்த மனித வாழ்க்கையின் குறிக்கோள் என்ன? நமது வாழ்வு மேம்பட வழிகள் யாவை? என்று நினைக்கலானார்கள். மனிதர்கள் தெய்வ நிலை அடைய முயல வேண்டும் என்று அறிந்து கொண்டார்கள். அதற்கான வழி முறைகள் யாவை என ஆராயத் தலைப்பட்டார்கள்.

மனிதன் வாழ்வில் மேம்பாடு அடைய அடக்கமும், நல்லொழுக்கமும வேண்டும். பிற உயிர்களிடத்து அன்பு வேண்டும். இனியசொற்களே பேச வேண்டும். பிறர் செய்த நன்றியை மறவாது அவர்களுக்குக் கைம்மாறு செய்ய வேண்டும். பிறர் தம் உடைமைகளைக் கண்டும் கேட்டும் அவர்களிடத்து அழுக்காறு கொள்ளலாகாது. பிறனில் விழைதல பெரிய பாவம் என்று அறிந்து போற்ற வேண்டும. புறங்கூறுதலும் பயனில்லாதவற்றைப் பேசுதலும் மனிதரைத் தாழ்த்திவிடும். தீவினை செய்ய அஞ்ச வேண்டும். அகந்தையை விட்டுவிட வேண்டும் என்று சான்றோர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

''உண்டு குணமிங்கு ஒருவர்க் கெனிலுங்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே-உண்டுமலர்ச்
சேர்க்கை விரும்பும் செழும்பொழில்
வாய்வேம்பன்றோ
காக்கை விரும்பும் கனி.''

என்பது நனனெறி. நமது குற்றங்களையும் குறைகளையும் மற்றொருவர் சுட்டிக்காட்டினால் நமது மனம் வருந்துகின்றதல்லவா? ஆதலினால் நாம் பிறரது குற்றங்குறைகளைக் கூறாமல் அவர்களது குணங்களையே கூற வேண்டும்.

ஏழை எளியவர்களுக்காக இரக்கம் காட்டுவது நமது கடமை. 'எவனது நெஞ்சம் ஏழை மக்களுக்காகத் துயரத்தில் அழுமோ அவனையேயான் மகாத்மா என்பேன். அன்றேல் அவன் துராத்மாவே' என்கிறார் சுவாமி விவேகானந்தர். 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்று வாட்டமுறும் உயிர்களுக்காக வருந்தினார் இராமலிங்க சுவாமிகள். எனவே நாம் பிறர் நலத்தையும் கருதி வாழ வேண்டும். அடுத்தவர் நலத்தை நினைப்பவர் தமக்கு ஆயுள் முழுவதும் சுபதினம் என்பதைக் கேள்வியுற்றிருக்கிறோமே!

மனிதன் சினத்தை அன்பால் வெல்ல வேண்டும். தீமையை நன்மையால் வெல்ல வேண்டும். உலோப குணத்தை உதார குணத்தால் வெல்ல வேண்டும். பொய்யை மெய்யால் வெல்ல வேண்டும் என்றார் புத்தர்பிரான்.

மனிதருக்குப் பகை வெளியுலகில் இல்லை. காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாத்சர்யம் முதலான பகைவர்கள் மனத்தினுள் இருக்கின்றனர். இவற்றை வென்றவர்கள் தெய்வ நிலை அடையவும் தகுதிபெறுகிறார்கள். மனிதராகியநாம்நீர்வாழ் பறவை போன்று உலகில் வாழ வேண்டும். அந்தப் பறவை மீது நீர்பற்றிக் கொள்கிறது ஆனால் அந்த நீரை அது உதறி எறிந்து விடுகின்றது. சேற்று மீன்போல நாம் வாழ வேண்டும். அந்த மீன் சேற்றிலேயே வாசம் செய்கிறது. ஆனால் அதன் தோல் எப்போதும் பளப்பளப்பாகவும் பிரகாசமாகவும் இருக்கிறது.

இவ்வுலகில் மனித உடல் வாய்க்கப் பெற்றோர் எல்லோரும் மனிதராக வாழ்வதில்லை. மனிதரிலும் கல் உண்டு. புல்லுண்டு, மரமுண்டு, புழு உண்டு, பாம்பு உண்டு, புள்ளுண்டு, விலங்கு உண்டு, பிற உண்டு.

திருவொற்றியூரில் ஒரு துறவி இருந்தார். அவரைத் தோப்பா சுவாமிகள் என்று அழைத்தார்கள். அவர் ஒரு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கோயிலுக்குப் போவோரைப் பார்த்து, குதிரை போகிறது, எருமை போகிறது, நரி

போகிறது என்று சொல்லிக் கொண்டே இருப்பாராம். நரி போகிறது என்று சொல்லப்பட்ட மனிதர் நரி போன்று வஞ்சக உள்ளம் பொருந்தியவர். பெருச்சாளி போகிறது என்று சொல்லப்பட்ட மனிதர் மற்றவர் ஈட்டி வைத்த பொருளை கவர்ந்து உழைக்காமல் உண்பவர். ஆனால் அந்தத் துறவியானவர், இராமலிங்க சுவாமிகள் அத்தெரு வழியே சென்றபோது, ஒரு மனிதன் போகிறார் என்று சொல்லுவாராம். ஆகவே மனிதப் பண்புள்ளவனே உண்மையான மனிதன் என்பது விளங்குகிறதல்லவா?

''பறவையைப் போல வானத்தில் பறக்கக் கற்றுக் கொண்டுவிட்டோம். மீனைப்போல நீரின் அடியில் நீந்தவும் கற்றுக் கொண்டுவிட்டோம். ஆனால் மனிதனாகப் பூமியில் நடந்து கொள்ள இன்னும் கற்றுக் கொள்ளவில்லை'' என்று நகைச்சுவைபடக் கூறினார் கதே என்ற அறிஞர்.

இனி மனிதனுக்கும் விலங்குகளுக்கும், உண்பதும் உறங்குவதும் மகப்பெறுவதும் பொதுவாக இருக்கின்றன. ஆனால் விலங்குகளுக்கும் மனிதனுக்கும் ஒரு எல்லைக்கல் இருக்கிறது. அதுவே தெய்வ சிந்தனை.

''வேளாவேளை விலங்குப் தான்
கிடைத்த தீனி மேயாதா?
மாளாவேட்கை தீர நீர்
மிசையாதா? கண் உறங்காதா?

ஆளாதா பெண்டு ஈன்றமகவு
அளியாதா என்? நலம்திங்கு
மாளா மதியால் தெளியாத
மகனுக்கென்னோ அறிவம்மா?

என்றுபாடுகிறது ''சாந்தி விலாசம்'' எனும் நூல்.

மனம் தெய்வ எண்ணத்தில் ஒன்றிவிட வேண்டும். மனம் தெய்வத்திடம் பூரணமாக ஈடுபடாதவரை விரதங்களும் பூஜைகளும் அர்த்தமற்றவை என்கிறது சௌந்தர்யலஹரி.

மரணத்தின் தருவாயில் என்னை மட்டும் தியானித்துக்கொண்டே ஒருவன் உயிர் துறப்பானாயின் அவன் என்னையே அடைகிறான் என்றார் கண்ணபிரான். உயிர் துறக்கும்போது பகவானை நினைக்க வேண்டுமானால் வாழ்நாள் முழுவதும் இடையறாது தெய்வ சிந்தனையுடன் வாழ்ந்திருக்க வேண்டுமல்லவா?

பிரார்த்தனையால் நாம் எல்லாவற்றையும் சாதிக்கலாம். ஆனால் தூய நினைவுடன் பிரார்த்தனை செய்தல் வேண்டும். இறைவனிடம் அடைக்கலம் புகுவதே சிறந்த வழி என்று நமது நாட்டுச் சமயங்கள் சொல்லுகின்றன.

தந்தையின கையைப் பிடித்துக் கொண்டு செல்லும் குழந்தை எச்சரிக்கையாக நடந்து செல்ல வேண்டும். ஆனால் தந்தையின தோள் மீது அமர்ந்து செல்லும் குழந்தைக்குக் கவலை இல்லை. மகிழ்ச்சியுடன் செல்கிறது. தெய்வத்திடம் அடைக்கலம் புகும் அன்பர்களின் பாங்கு அத்தகையது. பொறுப்பு எல்லாம் கடவுளுடையதாகிறது.

''அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தம்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம்பலவனார்க்கு
எல்லையில்லதோர் அடிமைபூண்டேனுக்கே''

என்று அப்பர் களிப்புடன் கூறுகிறார்.

## பிறவாநெறி பெறுக

**கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்**
**மற்றீண்டு வாரா நெறி.** —குறள்

''அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்
கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே''

என்றார் மாணிக்கவாசகப் பெருமான். கடவுளை நோக்கி நாம் ஓர் அடி சென்றால் அவர் நம்மை நோக்கிப் பத்து அடி தூரம் முன்வருகிறார் என்று பெரியோர்கள் கூறியுள்ளதை நோக்குக.

மாண்பொருளாகிய தெய்வத்திடம் மனத்தைத் திருப்பித் தெய்வத்தையே அல்லும் பகலும் அனவரதமும் சிந்தித்திருப்போர்க்குத் தெய்வத் தன்மையெல்லாம் வந்தடைகின்றன.

''தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வவடிவும் தரும்.''

எனபது அபிராமி பட்டர் அருள்வாக்கு.

மனத்தைத் தெய்வத்தில் ஒடுக்கிவிட்டால் **மனிதன்தெய்வநிலைஅடையப்பெறுகிறான்**. இதற்கு தியானமே வழியாகும். அலைபாயும் மனத்தை ஒரு முகப்படுத்தவும் அனுமதியைத் தேடித் தரவும் தியானம் உதவுகிறது.

மனிதன் எத்தகைய வாழ்வு வாழ வேண்டுமென்று சமய குரவர்கள் வாழ்ந்து காட்டியுள்ளார்கள். வாய்ப்பேச்சால் அல்ல, வாழ்க்கையின் மூலம் புகட்டும் பாடமே மேலானது. ஈசுவர சிந்தையாலும் தியானத்தாலும் உள்ளத்தைத் தூய்மைப்படுத்திக் கொண்டு வேறு எண்ணங்கள் குடி கொள்ளாத வகையில் இராமநாமத்தை எந்நேரமும் உச்சரித்த வண்ணம் வாழ்ந்தவர் மகாத்மா காந்தி.

நம்பிக்கைதான் மனித வாழ்வின் அடித்தளமாகும். 'நம்பினார் கெடுவதில்லை; இது நான்கு மறைத் தீர்ப்பு' என்பது பாரதி வாக்கு. இறைவனை முற்றிலுமாக நம்பினாலன்றிப்பலன் விளையாது என்பதற்குப் பாஞ்சாலியே சான்று. உரிய நேரத்தில் உரிய இடத்தில் இறைவன் நம்பினவரை காப்பான். ''வேண்டுவோர் வேண்டுவதே ஈவான் கண்டாய்'' என்பது தமிழ் மறை.

''பார்த்துக் கொண்டிருக்கும்போதே ஒவ்வொரு நாளாக ஆயுள் அழிந்து போகிறது. யௌவனம் கழிகின்றது. சென்ற தினங்கள் திரும்பி வருவதில்லை. காலம் உலகை விழுங்கி விடுகிறது. நீரில் குமிழிபோல இருக்கிறது செல்வம். வாழ்க்கை மின்னலைப்போல நொடியில் மறைவதாய் உள்ளது. ஆதலால் சரண் அடைந்தவர்களைக் காக்கும் உன்னை நான் இப்போது வந்தடைந்திருக்கிறேன். என்னைக் காத்து அருள் புரிவாயாக'' என்று ஆதிசங்கரர் பிரார்த்திக்கிறார். நாமும் அவ்வாறே பிரார்த்தனை செய்து உய்வோமாக.


சித்திர பாரதம்
கதை வடிவம் செவ்வேள்
படம் MN. ராஜா
அர்ச்சுனன் விடும் கணை தட்சகன் மனைவியின் உடலை இரு துண்டாக்க உடற்பகுதி நெருப்பிலும், தலைப்பகுதி வெளியேயும் விழுகிறது.
அசுவசேனன் உயிர் பிழைத்த போதும் அவன் வால் கனலில் கருகிவிடுகிறது. இந்திரன் அசுவசேனனைக் காப்பாற்றித் "தப்பி ஓடிவிடு" என்று அனுப்ப ..
கர்ணனைப் போய்ச் சேரும் அசுவசேனன் "என் தாயைக் கொன்று என் வாலையும் பொசுக்கிய அர்ச்சுனனை நான் கொல்வேன். என்னை நாகாஸ்திரமாய் ஏற்றுக் கொள்ளுங்கள்" என்றான்
அப்படியே ஆகட்டும்
காண்டவவனம் முழுவதும் தேடியும் தட்சகனைக் காணாத இந்திரன் மற்றைத் திக்கு பாலகர்களையும் சேர்த்துக் கொண்டு கடுமையாகப் போரிடுகிறான்
வசுக்களும், அசுவினி தேவரும், தேவர்களும் அர்ச்சுனனை வெல்ல முடியாமல் தோற்றோட, இந்திரனுக்கு அறிவுரை கூறி வானில் எழுகிறது ஓர் அசரீரி
"இந்திரா! உன் தட்சகன், காண்டவவன தகனத்திற்கு முன்பே, குருசேத்திரம் சென்றதால் உயிர் பிழைத்தான். கிருஷ்ணார்ச்சுனரை வெல்வது உன்னால் இயலாது. போரை நிறுத்து"
தேவேந்திரன் போரைக் கைவிட்டு கிருஷ்ணார்ச்சுனரைப் புகழ்ந்து விடை பெற, பிறகு எவ்விதத் தடையுமின்றி காண்டவவன தகனம் நடைபெறுகிறது.
அக்காட்டில் வசித்திருக்கும் அசுரச் சிற்பி மயன் "கிருஷ்ணா அபயம்! அர்ச்சுனா அபயம்!" எனச் சரண் அடைய அவனைக் கிருஷ்ணார்ச்சுனர் காப்பாற்றுகிறார்கள்.


அசுவசேனனும், மயனும், மந்தபால முனிவர் அருளைப்பெற்ற நான்கு கருநிறக் குருவிகள் மட்டுமே காண்டவவன தகனத்-தில் உயிர் பிழைக்கின்றன.
அனைத்துச் சங்கம, தாவரப் பொருட்களையும் பஸ்பமாக்கித் தன் நோய் தீரும் அக்கினி. கிருஷ்ணார்ச்சுனரை வாழ்த்தி விண்ணகம் சேர்கிறான்.
அசுரச்சிற்பி மயன் தன்னுயிரைக் காத்-ததற்கு நன்றியாக பொற்சுவர்களையும் மரகதத் தூண்களையும், பவழ உத்தரங்களையும் அமைத்து 60 லட்சம்பேர் சுமந்துவந்த அவ்வளவு இரத்தினங்களையும் இழைத்து, ஒரு சபா மண்டபத்தைப் பாண்டவர்களுக்கு அமைத்துத்தருகிறான்
வீமனுக்குச் சத்துருகாதினி கதையையும். அர்ச்சுனனுக்கு தேவதத்தச் சங்கினையும் வழங்குகிறான்.
தேவேந்திரனின் சபாமண்டபமோ என வியக்கத்தக்கதான சபா மண்டபத்தில் கிருஷ்ணருடன் பாண்டவர்கள் வீற்றிருக்கும் ஒரு நல்ல நாளில் அங்கு நாரதமுனிவர் வருகிறார்.
"ஓம் நமோ நாராயணா"
பித்ருலோகத்தில் உம் தந்தை பாண்டுவைக் கண்டுவந்தேன். இராசசூயயாகம் நீங்கள் செய்ய வேண்டும் என்பது அவர் விருப்பம்.
அப்படியே செய்கிறோம்.

# கந்தவேள் கருணை



## [32]

**டாக்டர் திருமுருக கிருபானந்த வாரியார்**

''தமையனே! எல்லாம் படித்த தாங்கள் மயங்கி இருக்கிறீர்கள். மயக்கத்தில் உள்ள தாங்கள் எனக்கு மயக்கம் என்கிறீர்கள். அடியேன் சொல்வதைக் கேளுங்கள். முருகனின் ஒப்பற்ற சக்தியை உணருங்கள்.

''அருவும் ஆகுவன் உருவமும் ஆகுவன் அருவும்
உருவும் இல்லதோர் தன்மையும் ஆகுவன் ஊழின்
கருமம் ஆகுவன நிமித்தமும் ஆகுவன் கண்டாய்
பரமன் ஆடலை யாவரே பகர்ந்திடற் பாலார்?''

''அவர் வேதங்களின் ஞானத்திற்கும், உபநிடதங்களின் ஞானத்திற்கும் காணுதற்கு அரியவர்; புதியவர்க்கும் புதியவர்; முதியவர்க்கும் முதியவர்; முதலுக்கு முதலானவர்; முடிவிற்கும் முடிவு ஆனவர்; உயிர்க்கும் உயிராய் நின்றவர்'' என்று சிங்கமுகாசுரன், அண்ணலின் பெருமையை அண்ணனுக்கு எடுத்துக் கூறினான்.

''வேதக் காட்சிக்கும் உபநிடதத்துச்சியில் விரித்த
போதக் காட்சிக்கும் காணலன்; புதியரில் புதியன்,
மூதக் கார்க்குமூ தக்கவன் முடிவிற் முடிவாய்
ஆதிக் காதியாய் உயிர்க்குயிராய் நின்ற அமலன்''.

''ஞானமே வடிவமாக இருக்கின்ற எம்பெருமான் திருமேனியின் தன்மையை நீயும் நானும் சொல்வதென்றால் அஃது எளிதோ? பரம மௌனிகளாக இருக்கின்ற ஞானிகளுக்கே அவர் பெருமை தெரியாதே!

''ஞானந் தான்உரு வாகிய நாயகன் இயல்பை
யானும் நீயுமாய் இசைத்தும்என் றால்
அஃதெளிதோ
மோனந் தீர்கலா முனிவருந் தேற்றிலர் முழுதும்
தானுங் காண்கிலன் இன்னமுந் தன்பெருந்
தலைமை.''

முருகப் பெருமானுக்குத் தன் பெருமை தெரியாமலில்லை. அவர் சர்வக்ஞர். சிலரிடம் அளவுக்கு மேல் செல்வமிருந்தால் எவ்வளவு இருக்கிறது என்று தெரியாது. அது போலத்தான் முருகனுக்கும்.

உலகில் நாமே பரம்பொருள் என்று கூறுகின்ற நாரணனும் நான்முகனும் மாயையுட் பட்டவராவர். முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்து அப்பாற்பட்டு நிற்கின்ற தனி முதல்வர் அவரையன்றிவேறு யாவர்?

''ஞாலம் உள்ளதோர் பரம்பொருள்
நாமெனப் புகலும்
மாலும் வேதனும் மாயையாம் வரம்பினுட்
பட்டார்
மூல மாகிய தத்துவ முழுவதுங் கடந்து
மேலு யர்ந்திடு தனிமுதல் அவன் அன்றி வேறார்?''

அத்தகைய அநந்தகோடி யண்டங்களையும் தமது வல்லமையால், ஒரு இமைப் பொழுதினில் உண்டாக்கவும் அழிக்கவும் வல்ல ஒப்பில்லாத முதற்கடவுளாகிய முருகவேள் உன்னுடன் போர் புரிய வேண்டும் என்று திருவிளையாடலாக திருச்செந்தூரில் வந்து எழுந்தருளியிருக்கின்றார்.

''அன்ன வாகிய அண்டங்கள் அநந்தகோ டியையும்
தன்ன தாணையால் ஓர்இமைப்பொழுதினில்தரவும்
பின்னர் மாற்றவும் வல்லதோர் ஆதியம் பிரான்
காண்
உன்னொா டேபொரும் ஆடலால் செந்திவந்
துற்றான்''

தேவர்களை நீ வருத்துவதை உயிர்க்குயிராகிய சிவபெருமான திருவுளஞ் செய்து, தாம் ஈந்தருளிய வரத்தைத் தாமே தவிர்ப்பாராயின், ''ஏன் செய்தீர்''? எனறு கேட்டு ''இவ்வாறு செய்க' என்று அவரைக் கற்பிப்பார் யாருளர்?

''வான்செய் தேவரை நீயலைக் கின்றதை
மதியா
ஊன்செய் கின்றபல் லுயிருக்கும் உயிரதாம்ஒருவன்
தான்செய் கின்ற தொல் வரத்தினைத் தான்தவிர்த்
திடுமேல்
ஏன்செய் தாயென வினவியே நிறுவுவார் எவரே''.



''அண்ணா! தத்துவங்களையெல்லாம் கடந்து தனி முதல்வனாயிருக்கின்ற முருகப்பெருமானை பாலன் என்று இகழ்ந்து பேசுகிறாயல்லவா? உனக்குத் தன்பேராற்றலை உணர்த்துவான் வேண்டியே அவர்போர்க்களத்தில் வந்திருக்கிறார். பிறப்பவர் இறப்பது திண்ணம். வச்சிர சரீரம் பெற்று விட்டோம் என்றும், ஆதலால் அழிவு இல்லை என்றும் எண்ணி விடவேண்டாம். தேவர் களையெல்லாம் சிறையிலிருந்து விடுதலை செய்து அழியாமலிருக்க வழி தேடுங்கள்'' என்று சிங்கமுகா சுரன் கூறினான்.

சூரபன்மன் சிங்கமுகன் அறிவுரையை ஏற் காமல் முருகனைப் பாலன் என்று பழித்துப் பேச லானான்.

''காற்றில் தள்ளுண்டு, நெருப்பினில் சூடுண்டு, கங்கை
ஆற்றில் தாக்குண்டு, சரவணம் புக்கலைப்புண்டு

வேற்றுப் பேர்முலை யுண்டழு தேவிளையாடும்
நேற்றைப் பாலனை யோபரம் பொருளென
நினைந்தாய்?''

''காற்றினால் தள்ளப்பட்டும், நெருப்பினால் கொளுத்தப்பட்டும், கங்கை நதியில் அலைகழிக்கப் பட்டும், சரவணப் பொய்கை அலைகளால் மோதப் பெற்றும், தாய் அல்லாத வேற்றுப் பெண்களிடம் ஸ்தன்ய பானம் செய்தும், அழுது விளையாடும் பாலனையா பரம்பொருள் என்றாய்? நான் பெரிய வன்; வரங்கள் பல பெற்றவன். ஆகவே, அந்தச் சிறுவனை வென்று நான் வெற்றிவாகை சூடுவேன். அசுரர் குலத்தில் பல பேரை அழிந்தார்கள். நம் குலத்தை அழித்த தேவர்களைச் சிறை வைத்தது குற்றமன்று. குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பது நியாயமே என்று மனுநூல் கூறுகிறது. ஆகவே ஒரு போதும் நான் தேவர்களைச் சிறையினின்றும் விடுவிக்க மாட்டேன். அதுமட்டுமல்ல; எனக்குப் பயந்து ஓடி ஒளிந்து கொண்டிருக்கும் இந்திரனை யும் பிடித்துக் கொண்டு வந்து சிறையில் வைப் பேன். என்னை எதிர்த்துச் சிவபெருமானே வந்து போர் செய்தாலும் பயப்படமாட்டேன். நீ எனக்கு உடன் பிறந்தவனாயிருந்தும் வானவர்களுக்குப் பரிந்து பேசுகின்றாயே, உடன் பிறந்தே எனக்குத் தீங்கு செய்ய முற்படும் உன்னைவிட எனக்கு வேறு பகையும் வேண்டுமோ? பூமிக்குப் பாரமாகவா நீ ஆயிரம் சிம்மத் தலைகளையும் இரண்டாயிரம் தோள்களையும் சுமந்து கொண்டிருக்கிறாய்? உன் னுடைய வலிமையும் வீரமும் எங்கே போய்விட் டது? உன்னால் அசுரர்களின் புகழ் மங்கிவிட்டது. நீ உயிருடன் இருப்பதும் ஒன்றுதான்; இறப்பதும் ஒன்றுதான். நான போகிறேன் போருக்கு. நீ உன் நகரம் சென்று உடம்பில் ஒரு புண்ணும் படாமல் சௌக்கியமாக இரு'' என்று கர்ஜித்தான் சூர பன்மன்.

சிங்கமுகாசுரன் எவ்வளவோ சொல்லியும் சூரனால் முருகனைச் சிறு குழந்தையாகத்தான் காண முடிந்தது. தேவர்களைச் சிறையிலிருந்து விடுவிக்க முடியாது என்று பிடிவாதமாகக் கூறி விட்டான்.

சிங்கமுகாசுரனுக்குத் தாபம் பொங்கியது. ''நான் நல்லதைச் சொன்னேன். கேட்காமல் என்னையே இகழ்ந்து விட்டார் தமையனார். பின்னால் எனன நேரும் என்பதை அவர் அறிந்து கொள்ளவில்லை, எல்லாம் விதியின் செயல், விதியை வெல்ல யாரால் முடியும்? சிவபெருமான் அண்ணனுக்குத் தந்தருளிய காலக் கெடு முடிந்து மறைய வேண்டிய தருணம் நெருங்குகிறது போலும்'' என்று மனத்துக்குள் எண்ணினான். அவனது உள்ளத்தில் சகோதர வாஞ்சை பெருக் கெடுத்தது. 'அண்ணன் தன்னை எவ்வளவு கடிந்து கொண்டாலும் அவனைக் கைவிடலாகாது. அவர் இறப்பதற்கு முனபே தான் இறப்பது முறை' என்று முடிவு செய்து கொண்டான். சூரபன்மனை நோக்கி, 'அண்ணா! நான் தவறு ஏதும் செய்தி ருந்தால் மன்னித்து விடுங்கள். நான போருக்குச் செல்கிறேன்; போரில் பகைவர்களைக் கொன்று வெற்றியுடன் மீள்வேன். எனக்கு விடை தாருங்கள்' என்று கூறினான்.

தம்பியின் சொற்களைக் கேட்டு சூரபன்மன் அளவிலா ஆனந்தமடைந்தான். 'தம்பி! உன் வல்லமை என்க்குத் தெரியும். என் நெஞ்சுறுதி யைச் சோதிக்கத்தான் முனபு ஏதேதோ பேசினாய் போலும்! நீ உன் ஊருக்குச் செல், அங்கு படை களையெல்லாம் திரட்டிக் கொண்டு தயாராக இரு. போருக்கு நான் அழைக்கும்பொழுது வர லாம்'' என்று கூறினார். அதன்படியே சிங்கமுகா

## சிவபெருமான் திருநீறு அணிவது ஏன்?

ஆன்மாக்களாகிய நாம் செய்த தீவினை நீறாகும் பொருட்டு திருநீறு தரிக்கின்றோம். சிவ பெருமானுக்கு வினை ஏது? அவர் ஏன் திருநீறு தரித்துக் கொள்கிறார் என்று ஒரு வினா எழும்.

நோய்வாய்ப்பட்ட குழந்தைக்காக தாய் மருந்துண்பதுபோல் நமது வினைதீர நம் தாயும் தந்தையுமான இறைவன் திருநீறு பூசிக் கொள் கிறான் என உணர்க.

சின்னவிளக்கு ஒன்று இருந்தால் போதும் அதை வைத்துக்கொண்டு இருண்ட வனாந்திரத் தைத் தாண்டிவிடலாம். பெரியசமுத்திரத்தைத் தாண்டவேண்டுமானால் சமுத்திரத்தின் அளவு விசாலமான படகு தேவையில்லை. சிறுபடகு போதும், அதைப்போலவே இந்த உலகைத் தாண்ட வேண்டுமானால் பிரம்மாண்டமான யக்ஞ யாகங் கள், அகோரமான தவங்கள் வேண்டியதில்லை. இறைவன் நாமஜெபம் எனும் சிறுகாரியமாகிய பட கினால், பாவக்கடலை சுலபமாகத் தாணடிவிட முடியும்.

—ஸ்ரீ சத்திய சாயி பாபா

சூரன் தனது நகரமாகிய ஆசுரத்துக்குச் சென்று விட்டான்.

o o o

''நாரணன் என்னுந் தேவும்நானமுகத் தவனும் முக்கட்
பூரணன் தானுமாகிப் புவிபடைத்தளித்து மாற்றி
ஆரண முடிவுந் தேறா அநாதியாய் உயிர்கட் கெல்லாம்
காரண னாயமேலோன் கழலிணைக் கருத்துள் வைப்பாம்.''

திருமாலாகியும் பிரம தேவராகியும், உருத் திர மூர்த்தியாகியும் உலகங்களைப் படைத்தும் காத்தும் நீக்கியும், வேத முடிவாகிய உபநிடதங் களாலுங் காண முடியாத அநாதியாகியும், எல்லா உயிர்கட்கும் காரணமாகியும் நின்ற தனிப்பெருந் தலைவரது திருவடியைச் சிந்தையில் வைப்போ மாக. இக்கடவுள் வாழ்த்துப் பாடலுடன் யுத்த காண்டம் தொடங்குகிறது.

கதிரவன் உதயகிரியினை அடைந்தான். திருச் செந்தூரில் எழுந்தருளியிருந்த கந்தக் கடவுள் வீர வாகுதேவரை நோக்கி, 'பழிக்கு அஞ்சாது பாவங் களைப் புரியும் சூரபன்மனையும் சூது நிறைந்த அசுரர்களையும் அழித்து தேவர்கள் துயர் நீக்கு வதற்காக வீரமகேந்திரபுரி செல்ல வேண்டும். நம் தேரைக் கொண்டுவா'' என்று கட்டளையிட்டார். தங்கள் துயரெல்லாம் நீங்கியது என்று கருதிய தேவர்கள் கநதப்பெருமானின கழலிணைகளை வணங்கித் துதித்தனர்.

கந்தப் பெருமானின் கட்டளைப்படி வீரவாகு தேவர் மனோவேகத் தேரைக் கொண்டு வந்து எம்பெருமானின் திருமுன்னர் நிறுத்தினார். சிங்காதனத்திலிருந்து இறங்கிய எம்பெருமான் ''நாம் சூரபன்மனைஅழிக்க வீரமகேந்திரபுரி செல் கிறோம். நீங்களும் அவரவர் வாகனங்களில் நம்முடன் புறப்பட்டு வாருங்கள்'' என்று தேவர் களுக்கு உத்தரவிட்டார்.

பிரமதேவர் அன்னப் பறவை மீதும், திருமால் கருடன் மீதும், இந்திரனும் மற்றைய தேவர்கள் தத்தம் வாகனங்கள் மீதும் ஏறிக் கந்த வேளைச் சூழ்ந்து கொண்டார்கள். நினைத்த மாத்திரத்திலேயே எல்லாப் புவனங்களையும் அழிக்கும் ஆற்றல் பெற்ற படைத் தலைவர்கள் நூற்றெட்டுப் பேரும் தொடர்ந்தார்கள். அதனை அடுத்து இரண்டாயிரம் வெள்ளம் பூதப் படை களும் ஆரவாரத்துடன் புறப்பட்டன. வான வர்கள் பூமழை பொழிந்தார்கள்.

முருகப் பெருமானுடன் சென்ற பூதப் படை களின் பேரொலி எங்கும் ஒலித்தது. அவர்கள் சென்றபோது ஏற்பட்ட புழுதி சூரிய சந்திரர் களுடைய ஒளியையும் மறைத்து விட்டதாம். கடலில் பூத சேனைகள் இறங்கினார்கள். அவர் களுக்குக் கடலே கணுக்கால் அளவுதான் இருந்தது. கடலில் இருந்த பெரிய பெரிய மீன்களும் திமிங்க லங்களும் சிறு புழுக்களைப் போன்றிருந்தன. பூதப் படை இறங்கிக் கடலைக் கலக்கியதால் அது சேறாகியது. அந்தச் சேறு உலர்ந்தபின் புழுதியாக எங்கும் பறந்தது.

வீரமகேந்திரபுரி தென்கடலில் உள்ளதொரு தீவு. வடக்கே உள்ள தீவு இலங்கை. அந்த வழி யாக எம்பெருமான் சென்றபோது, பிரமன், திருமால், இந்திரன் ஆகிய மூவரும் சுவாமியை வணங்கி, ''மகா பாவியாக உள்ள சூரபன்மன் இருக்கும் மகேநதிரபுரி தங்கள் திருப்பாதம் பதியத் தகுதி பெற்றதல்ல, அந்நகருக்கு அடுத்த எல்லை யாகிய இங்கேயே தங்கியிருந்து போர் செய்வ தற்குப் பாசறை அமைத்துக் கொள்ளலாம்'' என்று வேண்டிக் கொண்டார்கள். சுவாமி அந்த வேண்டு கோளை ஏற்றுக் கொண்டார். தேவதச்சனை அழைத்து ''உடனே விரைந்து இங்கு ஒரு பாசறை ஏற்படுத்து'' என்று எம்பெருமான் ஆணையிட் டார். அந்த ஆணையின் வண்ணம் தேவதச்சன் பாசறையை அமைத்தான். அதற்கு ஏமகூடம் என்று பெயரிடப்பட்டது.

எம்பெருமானின் தேர் கீழே இறங்கியது. சுவாமி ஏமகூடத்தின வீதிகளில் பூத சேனைகளை நிறுத்தினார். இலக்கத்தொன்பது வீரர்களோடு திருக்கோயிலினுள் சென்று அரியணையில் அமர்ந் தார்.

ஏமகூடம்தான் கதிர்காமம், கதிர்காமம் என் றால் ஒளிமயமான விருப்பத்தையெல்லாம் நிறை வேற்றித் தருவது என்று பொருள். அங்கே சுவாமி ஒளிமயமாக விளங்குகின்றார். எனவே அவரைத் தரிசிக்கக்கூடாது என்று திரை போடப்பட்டுள்ளது அங்கே உள்ள கர்ப்பூர தீப ஒளியை தரிசனம் செய்ய வேண்டும்.

முருகப் பெருமான் கதிர்காமத்தில் வந்து தங்கிவிட்டார். O

நீங்கள் செய்யும் எந்த சாதனையும் உபயோக மற்றதென்று நினைக்கவேண்டாம். ஒரு பாராங் கல் இருபது தடவை சுத்தியால் அடிபட்டு உடைய லாம். ஆனால் அந்த இருபதாவது அடியால் மட் டும் அந்தப் பாராங்கல் உடையவில்லை. முதலில் கொடுத்த பத்தொன்பது அடிகளும் துணையாக இருபதாவது அடிக்கு உடைந்தது. இதேவிதமாக தியானம், ஜபம் விஷயமும் ஒவ்வொரு நிமிஷமும் சாதனையிலிருந்தால் ஒவ்வொரு படியாக உங்களை ஏற்றி அடைய வேண்டிய இடத்திற்குச் சிறுக சிறுக அழைத்துச் செல்லும்.

— ஸ்ரீ சத்திய சாயி பாபா

# தொண்டைநாட்டு வைணவத் திருத்தலங்கள்

**தொகுப்பு: நித்திலக்கோ**

1. அத்தியூர்(கச்சி) வரதராசப்பெருமாள், பெருந்தேவி.

அத்தியூரான் புள்ளை யூர்வான்; அணிமணியின் துத்திசேர் நாகத்தின் மேல்துயில்வான்;- முத்தீ மறையாவான்; மாகடல்நஞ்சுண்டான் றனக்கும் இறையாவான்; எங்கள் பிரான்.

-பூதத்தாழ்வார்.
(இயற்பா இரண்டாந் திருவந்தாதி)

கோயில் (திருவரங்கம்) திருமலை (திருவேங்கடம்), பெருமாள் கோயில் (அத்தியூர்) ஆகிய வைணவ முக்கிய தலங்கள் மூன்றனுள், இக்காலத்தில், 'சின்ன காஞ்சிபுரம்-வரதராசப் பெருமாள் கோயில் என வழங்கும் அத்தியூரும் ஒன்றாகும்.

பாசுரங்களில் பொதுவாகக் கச்சியென்று குறிக்கப்படும் இடங்களில் இத்தலம் கொள்ளப்படுகிறது.

ஐராவதம் எனும் யானையே மலையுருவாகி எம்பெருமானைத் தாங்கினமையால் இது அத்திகிரி அத்தியூர் என்றாயிற்று.

பூதத்தாழ்வார்(2), பேயாழ்வார்(1), திருமங்கையாழ்வார்(4) அருளிச் செய்த ஏழு பாசுரங்களை, இத்தலத்துப் பேரருளாளன் என்னும் தேவராசன் பெற்றுத்தந்துள்ளார். காஞ்சிகருடசேவை இப்போதும் புகழ்பெற்ற திருவிழாவாகும்.

செங்கற்பட்டு மாவட்டத்தின் தலைநகராயுள்ள காஞ்சிபுரத்திற்குச் சென்னையிலிருந்து இரயிலிலும், பேருந்திலும் போய்வரலாம். இந்நகர எல்லைக்குள் விட்டுனு நகரங்கள்(விண்ணகரங்கள்) பதினான்கும், தேவாரப்பாடல் பெற்ற சிவத்தலங்கள் ஐந்தும், இவையன்றி இன்னும் பல கோயில்களும் இருக்கின்றன.

2. அட்டபுயகரம்(அட்டபுஜம்)

ஆதிகேசவப்பெருமாள், அலர்மேல்மங்கை

கலைகளும், வேதமும், நீதிநூலும்,
கற்பமும் சொற்பொருள்தானும், மற்றை
நிலைகளும், வானவர்க்கும் பிறர்க்கும்
நீர்மையினாலருள் செய்து, நீண்ட
மலைகளும், மாமணியும், மலர்மேல்
மங்கையும், சங்கமும் தங்குகின்ற,
அலைகடல் போன்றிவ ரார்கொலென்ன
அட்ட புயகரத் தேனென்றாரே!

-திருமங்கையாழ்வார்.
பெரிய திருமொழி)

(கற்பம்- வேதங்களில் விதிக்கப்பட்ட செயல்களைச் (வேள்விகளை) செய்யும் முறைகளை உணர்த்தும் நூல். நீர்மை-தன்மை இங்குள்ள எம்பெருமானுக்கு எட்டுத் திருக்கைகள் (அட்டபுஜகரம்) உள்ளன.

திருமங்கையாழ்வார்(11) பேயாழ்வார்(1) அருளிய 12 பாசுரங்களைப் பெற்றுத்தந்த இத்திருக்கோயிலுக்கு வயிரமேகன் என்னும் தொண்டையர்கோன் சில திருப்பணிகள் செய்துள்ளான். அத்திகிரி, அட்டபுயகரம், திருவெஃகா, திருத்தண்கா, வேளுக்கை என்னும் ஐந்து திருப்பதிகளும் சின்ன காஞ்சிபுரத்தில் உள்ளன.

பெரிய காஞ்சிபுரத்தில் ஊரகம், நீரகம், காரகம், கார்வானம், கள்வனூர், பாடகம், நிலாத்திங்கள் துண்டம், பவளவண்ணம், பரமேசுர விண்ணகரம் ஆகிய ஒன்பது திருப்பதிகள் இருக்கின்றன.

3) திருத்தண்கா (விளக்கொளிக்கோயில்)

விளக்கொளிப்பெருமாள், மரகதவல்லி

முளைக்கதிரைக் குறுங்குடியுள் முகிலை மூவா
மூவுலகும் கடந்தப்பால் முதலாய் நின்ற
அளப்பரிய ஆரமுதை, அரங்கம் மேய
அந்தணனை, அந்தணர்தம் சிந்தையானை,
விளக்கொளியை, மரகதத்தைத் திருத்தண்காவில்
வெஃகாவில், திருமாலைப் பாடக் கேட்டு
வளர்த்ததனால் பயன்பெற்றேன் வருக என்று
மடக்கிளியைக் கைக்கூப்பி வணங்கினாளே''

-திருமங்கையாழ்வார்.
(திருநெடுந்தாண்டகம்)

திருமங்கை மன்னனின் இரண்டு பாசுரங்களைப் பெற்றுகந்த திருப்பதி. வேதாந்த தேசிகர் பிறந்தருளிய திருத்தலம்.

4) வேளுக்கை (முகுந்தநாயகர் கோயில்)
முகுந்தநாயகர், வேளுக்கைவல்லி.

சிறந்தவென் சிந்தையும் செங்கண் அரவும்
நிறைந்தசீர் நீள்கச்சி யுள்ளும்-உறைந்ததுவும்
வேங்கடமும் வெஃகாவும் வேளுக்கைப் பாடியுமே
தாம்கடவார் தண்டுழா யார்.

-பேயாழ்வார்.


(இயற்பா, மூன்றாந் திருவந்தாதி)

அரவும் (இங்கே) ஆதிசேடன்; கச்சி-காஞ்சிபுரம், கடவா-நீங்கார்)

கச்சிக்குப் பேயாழ்வார் பாடிய ஒரே பாசுரம் இது.

'வேள், இருக்கை' என்னும் இரண்டும் சொற்கள் வேளுக்கையென மருவிற்று வேள்-காமம், அதாவது இச்சை, திருமால் விருப்பத்தோடு எழுந்தருளியிருக்குமிடம் வேளுக்கை. இதற்கு நேரான வடசொல் திருநாமம் ''காமாஸிகா'.

இத்தல எம்பெருமான் இப்போது ஓர் ஏரியின் நடுவில் தண்ணீரால் சூழப்பெற்று இருந்து வருகிறார். பேயார்-3, திருமங்கையார்-1 ஆக 4 பாசுரங்கள்.



5. பாடகம் (பாண்டவதூதர் சந்நிதி)

பாண்டவதூதர், (உருக்குமினி, சத்தியபாமை)

உற்று வணங்கித் தொழுமின், உலகேழும்
முற்றும் விழுங்கும் முகில் வண்ணன்-பற்றிப்
பொருந்தாதான் மார்பிடந்துபூம்பாடகத்துள்
இருந்தானை, ஏத்துமென் நெஞ்சு.

-பூதத்தாழ்வார்.
(இரண்டாந்திருவந்தாதி)

இக்கோயில் கல்வெட்டுகளில் எம்பெருமான் பெயர் ''தூதஹரி' என்றுள்ளது. பூதத்தார்1, பேயார்1, திருமழிசையார்2, திருமங்கையார்2 ஆக-6)

6 முதல் 10 வரை (நீரகம், காரகம், கள்வனூர், கார்வானம் நிலாத்திங்கள் துண்டம்)

நீரகத்தாய்! நெடுவரையின் உச்சிமேலாய்!
நிலாத்திங்கள் துண்டகத்தாய்! நிறைந்தகச்சி
ஊரகத்தாய்! ஒண்துறை நீர்வெஃகா உள்ளாய்
உள்ளுவார் உள்ளத்தாய்! உலகம் ஏத்தும்
காரகத்தாய்! கார்வானத்து உள்ளாய்! கள்வா!
காமருபூங் காவிரியின் தென்பால் மன்னு
பேரகத்தாய்! பேராது என் நெஞ்சின் உள்ளாய்!
பெருமான் உன் திருவடியே பேணினேனே!''

-திருநெடும்தாண்டகம்.

காஞ்சி உலகளந்த பெருமாள் கோயில் என வழங்கும் ஊரகத்துள்ளேயே நீரகம், காரகம், கார்வானம் ஆகிய மூன்று திவ்வியதேசங்களும் உள்ளன.

---

நிலாத்திங்கள் துண்டத்தான் சந்நிதி காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரர் கோயிலுக்குள் முதல் பிரகாரத்தில் இருக்கிறது.

திருக்கள்வனூர் சந்நிதி காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோயிலுக்குள் இருக்கிறது.

பெரிய காஞ்சிபுரத்திலுள்ள இவ்வைந்து திவ்விய தேசங்களையும். திருமங்கையாழ்வாரின் மேற்குறித்த ஒரே எண் சீர் விருத்தத்தாலேயே சேவிக்க வேண்டும்.

நீரகம் - சகதீசப்பெருமாள், நிலமங்கை வல்லி.

நிலாத்திங்கள் துண்டம்-நிலாத்திங்கள் துண்டத்தான் ) நேரொருவரில்லாவல்லி. காரகம் கருணாகரப்பெருமாள்; பத்மாமணி நாச்சியார். கார்வானம் கள்வர்; கமலவல்லி, கள்வனூர்- ஆதிவராகப்பெருமாள்; அஞ்சிலை வல்லி.

11. ஊரகம்.
உலகளந்தபெருமாள்; அமுதவல்லி.

நின்றதெந்தை ஊரகத்(து); இருந்ததெந்தை
பாடகத்து;
அன்று வெஃகணைக் கிடந்த(து) என்னிலாத
முன்னெலாம்
அன்றுநான் பிறந்திலேன்; பிறந்தபின் மறந்திலேன்;
நின்றதும் இருந்ததும் கிடந்ததும் என் நெஞ்சுளே

-திருமழிசையாழ்வார்

திருசந்தவிருத்தம்

(உரகம்-ஆதிசேஷன்)

இவர் பெரியவடிவினர். மேல் எடுத்த திருவடியைப் பந்தம் உயர்த்தித்தான் காணவேணும். அர்ச்சகர்கள் தீப்பந்தம் ஏந்தி பெருமானைக் காணாதே, அடியாரைக் காணுவர்; அவர் விழியின் வியப்பின் விரிவைக் காண!'

திருக்குறள் உரையாசிரியர் பரிமேலழகர் இந்த உலகளந்த பெருமாள் கோயில் அர்ச்சகராக இருந்தவர் என்பர்.
திருமழிசையார், 2. திருமங்கையாழ்வார்4

12. திருவெஃகா (யதோத்காரி சந்நிதி)
சொன்னவண்ணம் செய்த பெருமாள்;
கோமளவல்லி

வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும், அஃகாத
பூங்கிடங்கில் நீள்கோவல் பொன்னகரும்-நான்
கிடத்தும்
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தானே
என்றால் கெடுமாம் இடர்.

-பொய்கையாழ்வார்.

(இயற்பா-முதற்திருவந்தாதி)

எம்பெருமான் கணிகண்ணன் சொற்படி உடன் சென்றதால், சொன்னவண்ணம் செய்த பெருமாள் என்றழைக்கப்பெற்றார்.

இங்குள்ள பொய்கையில் (புட்கரிணி) தோன்றியதால் பொய்கை ஆழ்வார் என்ற பெயரைப் பெற்றார் முதலாழ்வார்.

வேகவதி ஆற்றின் வெள்ளத்தைத் தடுக்க, குறுக்கே சயனங்கொண்டார் பெருமாள். வேகவதி அணை-வேகணை-வெஃகணை-வெஃகா என மருவிற்று. திருமழிசையார் 3, திருமங்கையார் 6, பொய்கையார்1, பேயார்4, நம்மாழ்வார்1 (ஆக15)

13. பவளவண்ணம் (பவள வண்ணர் கோயில்)
(பவளவண்ணர்; பவளவல்லி)

## பொய்ப் பொருளைத் தேடாதே !

உலகப் பற்றுள்ளவர்கள் உபயோகம் அற்ற பொருள்களைத் தேடுபவர்கள் ஆவார்கள். உலகப் பற்றற்ற தூய ஆத்மாக்கள் ஈசுவரனை நம்பி அவனையே சதா சர்வ காலமும் சிந்தித் திருப்பார்கள்.

— இராமகிருஷ்ண பரமஹம்சர்

வங்கத்தால் மாமணிவந் துந்து முந்நீர்
மல்லையாய்! மதிள்கச்சி யூராய்! பேராய்,
கொங்கத்தார் வளங்கொன்றை அலங்கல் மார்வன்
குலவரையன் மடப்பாவை இடபால்
கொண்டான்
பங்கத்தாய்! பாற்கடலாய்! பாரின் மேலாய்!
பனிவரையின் உச்சியாய்! பவள வண்ணா!
எங்குற்றாய் எம்பெருமான்? உன்னை நாடி
ஏழையேன் இங்ஙனமே உழிதர் கேனே!

-திருநெடுந்தாண்டகம்.

இக்கோயிலுக்கு அருகில் பச்சைவண்ணர் கோயில் இருக்கிறது.

திருமங்கையாழ்வார் இவ்வொரு பாடலால் பவள வண்ணரை மங்களா சாசனம் செய்துள்ளார்.

14. பரமேச்சுர விண்ணகரம்.

பரமபதநாதன் (வைகுண்டப்பெருமாள் கோயில்)
வைகுந்தவல்லி.

சொல்லு வன் சொற்பொருள் தானவையாய்ச்
சுவை ஊறொலி நாற்றமும் தோற்றமுமாய்
நல்லரன் நான்முகன், நாரணனுக்கு
இடந்தான் தடஞ் சூழ்ந்தழ காயகச்சி,
பல்லவன், வில்லவன் என்றுலகில்
பலராய்ப்பல வேந்தர் வணங்குகழல்
பல்லவன், மல்லையர் கோன்பணிந்த
பரமேச் சுரவிண்ணகரம் அதுவே!

பெரியதிருமொழி.

பரமேச்சுவர பல்லவன் இக்கோயிலிலே பெரும் நற்பணிகளைச் செய்தான். அணிகலன்களை எல்லாம் ஒன்றை ஆயிரமாகப் பெருக்கினான்.

திருமங்கையாழ்வார் ஒரு திருமொழியால் (பத்துப் பாசுரங்கள்) மங்களாசாசனம் செய்துள்ளார்.

—தொடரும்

# ஒன்றே குலம்

# ஒருவனே தேவன்

திருமந்திரச் செம்மல் திருமிகு டி.வி. வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ்

சைவ சமயத்தின் மறுபெயர் திருத்தொண்டு நெறி எனலாம். கைமாறு கருதாது மக்களுக்கு பணிசெய்து கிடப்பதே தொண்டுநெறியாகும். எறும்பு முதல் யானை ஈறாக எல்லா உயிர்கட்கும் உதவி செய்தலும் தொண்டாகும். ஒரு பயனைக் கருதி செய்யும் பணி தொண்டாகாது. தொண்டெனும் உணர்வு அன்பு நிறைந்த உள்ளத்தின் வெளிப்பாடாகும். இறைவனின் திருவடிகளிலே தன்னை அர்ப்பணித்து, எல்லாம் அவன் செயல் என்கின்ற நினைப்பில் வேற்றுமை மறந்து உயிர்களையெல்லாம் ஒன்றாகக் கருதி தன் அறிவையும் ஆற்றலையும் பிறருக்கு எநத வகையிலும் பயன்படுத்தலே தொண்டாகும்.

திருநாவுககரசர் பெருமான் தொண்டுநெறிக்கு ஓர் இலக்கணமாக வாழ்ந்தார். ''தன்கடன் அடியேனையும் தாங்குதல்; என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்கிற ஒலியை எழுப்பினவர் அப்பர் பெருமான் ஆவார். அடிகள் கையில் உழவாரப் படை ஏந்தி திருக்கோயில்களிலும், திருவீதிகளிலும் துப்புரவுப் பணிகள் செய்தார். மக்கள் உயர பல அருள்வாக்குகள் வழங்கினார். பதிகங்கள் பாடினார். பாம்பால் மாண்ட அப்பூதியடிகளின் சிறுவனை எழுப்பினார். திருவீழிமிழலையில் மழையின்றி வறுமையால் வாடிய மக்களுக்கு சிவனருள் துணைகொண்டு உணவு அளித்தார். இப்பூவுலகில் எணணிலிகோடி மக்கள் பெரும்பாலும் தன்னலத்திற்கே அரும்பாடுபட்டு தங்களது அறிவையும், ஆற்றலையும் வீணாக்குகின்றனர். பயனற்ற வாழ்வை நடத்திவரும் மக்களிடையே இறை எண்ணத்தை வித்திட்டு, அந்த வித்தானது தன்னலமற்ற உள்ளமாக வளர்வதற்காக அருள்மழையை என்றும் பொழிந்துகொண்டிருக்கும் இறைவன் வழியை தொண்டுநெறி மூலமாக தெளிவாக எடுத்துக்காட்டி தன்னையே தொண்டுமயமாக்கிக் கொண்டவர் அப்பர்பெருமான்.

தொண்டுநெறிக்கு அடிப்படை தன்னலமற்ற உள்ளமாகும். நான், எனது என்கிற நினைப்புமாற வேண்டும். இந்த உடலை, அதனுடன் சேர்ந்துள்ள கருவிகளை, நான், எனது என்று கருதிக்கொண்டிருக்கும்வரை தன்னலமற்ற தன்மை நமது உள்ளத்திலே புகாது. இந்த அறியாமையைப் போக்க இறைவன் அருள் வேண்டும். நமது எண்ணங்களும், உணர்வுகளும் புறப்பொருள்கள் மீது உள்ள பற்றினை நீக்கி, நம்முள்ளேயே குடிகொண்டுள்ள பேரறிவுப் பிழம்பை நெருங்க முயலவேண்டும். நெருங்க நெருங்க அறியாமைத்திரை அகலும். இப்போது நாம் பெற்றிருக்கும் அறிவே இந்த அறியாமைத் திரையாக இயங்கி வருகின்றது என்பதையும் நாம் உணர்ந்துகொள்ளவேண்டும்.

மனித உள்ளம் இரண்டு நிலைகளில் இயங்குகின்றது. ஒன்று அறிவுநிலை, மற்றது உணர்வுநிலை. அறிவுநிலையில் நின்று ஒன்றை ஆராய நாம் முற்படும்போது அதன் தன்மையைப் பாகுபடுத்திப் பல பிரிவுகளாக்கி அவற்றுள் உட்புகுந்து அப்பொருளின் அடிப்படை உண்மையைப் பெற முயலுகின்றோம். அதேபொருளை உணர்வுநிலையிலிருந்து பார்க்கும் பொழுது அது இது என்று பாகுபடுத்திப் பேசாமல் அப்பொருளின் முழுமைத் தன்மையை காண விழைகின்றோம். அறிவு பாகுபடுத்துவது, உணர்வு சேர்த்துத் தருவது. அறிவு ஒரு பொருளின் பகுதித் தன்மையைக் காண்பது. உணர்வு அப்பொருளின் முழுமைத் தன்மையை அடைய முற்படுவது.

தமிழகத்தின் சான்றோர்கள், வாழ்வின் உண்மையில் இந்த முழுமையைக் கண்டார்கள். சீவராசிகளின் ஒருமைப்பாட்டை இந்த முழுமையின் விளக்கமாகக் கண்டார்கள். சங்கத்தமிழ் காலம் முதற்கொண்டே தமிழர்களின் வாழ்வும் நெறியும் இந்த முழுமையின் அடிப்படையில் அமைந்துள்ளது. ''யாதும் ஊரே; யாவரும் கேளிர்'' என்றார் சங்கத்தமிழ் புலவர் கணியன் பூங்குன்றனார். எல்லா ஊரும் எமது ஊரே, எல்லா மனிதரும் எமது உறவே என்கிற எண்ணம் அன்பு நிறைந்த நெஞ்சத்திற்குத்தான் வரும். அறநெறியில் நிற்கும் நெஞ்சம்தான் இதன் உண்மையை உணரும். அப்போது நன்மை செய்தவர் நண்பர் என்றும், தீமை செய்தவர் தீயவர் என்றும் எண்ணும மனப்பாங்கிற்கு இடமில்லை. பூவுலகில் பிறந்த ஒவ்வொரு உயிரும் இறப்பது இயற்கையே. இன்பம் வந்திடினும், துன்பம் நேர்ந்தபொழுதும் ஆற்றோடு போகும் தெப்பம்போல நடுநிலைமை கொண்டு, விவேகத்துடனும், பக்குவத்துடனும் தம் பணிகளை தொடர்ந்து செய்துவரும் மக்களின் வாழ்க்கையே அமைதிபெற்று முழுமையுடன் விளங்கும். இதுவல்லவோ முறை! ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் சான்றோர் சென்ற செந்நெறிக்கு பெயரே மெய்யறிவு என்றும் அந்த மெய்யறிவினால் நாம் பெறும் நிலைமை நடுவு நிலைமை என்றும் தமிழர் உள்ளத்தில் ஊறிக்கிடந்த உயர்ந்ததோர் உண்மையை ஓர்

சிறந்த பாடலின் மூலம் கணியன் பூங்குன்றனார் விளக்கும் அழகே அழகு.

''யாதும் ஊரே; யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன;
சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்
இனிது என மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்
இன்னாது என்றலும் இலமே; 'மின்னொடு
வானம் தண்துளி தலைஇ, அறாது
கல்பொருது இரங்கும் மல்லற் பேரியாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல, ஆருயிர்
முறைவழிப் படூஉம்' என்பது திறவோர்
காட்சியின் தெளித்தனம் ஆகலின் மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே''.

(புறநானூறு-பாடல்: 192)

நடுவு நிலைமை அடைவது எளிதன்று. இறை அருளாலேயே அது நடக்கும். ''நடுவு நின்றார் சிலர் ஞானிகளாவர்; நடுவு நின்றார் சிலர் தேவருமாவர்'' என்பார் திருமூலர். இறை அன்பின்றி நடுவு நிலைமை கைகூடல் கடினமாகும். இறை அன்பு உள்ளத்திலே நிரம்பி வழிந்து மற்றுமுள்ள எல்லா சீவராசிகளையும் தன்னுள் அழுத்திக்கொள்ளும்போது ஒருமைப்பாட்டு உணர்வு உள்ளத்திலே வியாபியமாக நிற்கும். பிறர்படும் துன்பம் நமது துன்பமே என்னும் நினைப்பு அத்தகைய உள்ளத்திற்கே தோன்றுகிறது. மனிதர்கள் என்ன, விலங்குகளும் பறவைகளும் இறையின்ப வெள்ளத்தில் மூழ்கி பிறர்பால் தம் அனபினை செலுத்திய நிகழ்ச்சிகள் பலவற்றை திருவிளையாடல் புராணத்தில் காணலாமே! அத்தகைய அன்பிற்கு ஈடாக ஈசன் அருளும் கிட்டும் என்பதும் தெளிவாகிறது. நாரைக்கு முக்தி கொடுதத வரலாற்றில் அன்பின் அடிப்படையில் அமைந்த பறவைகளின் ஒருமைப்பாட்டு உணர்வு வியக்கத் தக்கதல்லவோ!

''தன்கிளையன்றி வேற்றுப் பறவைகள் தாமும்
தன்போல்
நன்கதி அடைய வேண்டிற் றேகொல் இந்நாரை
செய்த
அன்பினில் வியப்போ? ஈசன் அருளினில் வியப்போ?
அன்பர்க்கு
இன்புருவான ஈசன் அருள் அன்பர்க்கு எளிதே ஐய'

விலங்குகளும் பறவைகளும் ஒன்றையொன்று நேசித்து உதவி செய்துகொள்வது கற்பனை அல்ல. அன்றா.. நிகழ்ச்சியாகவும இதைப்டல இடங்களில் காணலாம். அவற்றை ஒன்றுசேர வைக்கும உணர்வு நம்மால புரிநது கொள்ள முடியாமல் போகலாம். ஆனால் மனுநீதிச்சோழன் உள்ளத்திலே பிறந்த அந்த ஒப்பற்ற தியாக உணர்ச்சியை ஒருவரும் மறுக்க முடியாது. ஏதோ ஒரு சூழ்நிலையில் ஒரு கன்று தனது அரச இளங்குமாரன் ஏறிச்சென்ற தேர்ககாலில் பட்டு இறந்ததால் ஏற்பட்ட தாங்கவொணாத துன்பத்தை தாய்ப்பசு திருவாரூரை ஆண்ட சோழ மன்னனிடம் தெரிவித்தபொழுது அந்த துன்பத்தைப்போக்க வெறுமனே அந்தணர்கள் விதித்த முறை வழியில் நிற்பது மட்டுமே போதாது என்கிற எண்ணம் மன்னனின் உள்ளத்திலே தோன்றியது. அவன் எல்லா உயிர்களையும் ஒன்றாகவே கருதினான் என்கிற உண்மை நன்கு விளங்கும். பசுவின் துன்பத்தை தான் நீக்க இயலாதவன் ஆயினும் அதைத் தானும் தாங்குவதே பொருத்தமாகும். அதுவே தருமம் என்று கூறி மன்னவன் தேர்க்காலில் தனது மகனை கிடத்தி அவன்மேல் தேரைச் செலுத்தினான்.

''எனமொழிந்து மற்றிதனுக்கு இனி இதுவே
செயல்இவ்ஆன்
மனம் அழியும் துயர் அகற்ற மாட்டாதேன் வருந்
தும்இது
தனதுறுபேர் இடர்யானும் தாங்குவதே தருமம்என
அனகன் அரும் பொருள் துணிந்தான் அமைச்சருப்
அஞ்சினர் அகன்றார்''.

(பெரியபுராணம்)

இவ்வாறு செய்து அறநெறிக்கு ஓர் புதிய விளக்கத்தை மனுநீதிச்சோழன் வரலாற்றிற்கு அளித்துள்ளான். பிற உயிர்கள படும் துன்பத்தைப் போக்க முயலுதலும், அது இயலாதபொழுது அந்தத் துன்பத்தைத்தானே ஏற்று அனுபவித்தலும் அறநெறியின் உயர்ந்த படியாகும். பசுங்கன்றாயினும், வேறு எந்த விலங்காயினும் அது இறைவன் உறையும் இடம் என்கிற மனப்பான்மை, தன்க்கும் மற்ற உயிர்களுக்குமிடையே அடிப்படையான வேற்றுமை ஒன்றுமில்லை என்கிற உணர்வு அசையும் பொருட்கள், அசையாப் பொருட்கள், எல்லாம் இறைவனுடைய பேரறிவும் பேராற்றலும் இயங்கும் மாபெரும்மேடை என்கிற கொள்கையில் தீவிர நம்பிக்கை ஆகியவை மெய்யுணர்வு பெற்றவர்களுடைய அனுபவச் சின்னங்களாகும்.

''உறை சேரும் எண்பத்துநான்கு நூறாயிரமாம்
யோனி பேதம்
நிறை சேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய்
அங்கங்கே நின்றான்''


என்று ஞானசம்பந்தப்பெருமான் அருளுகின்றார்.

இந்தக் காட்சி அனுபவத்தை நேரில் பெற்று பேரானந்த வெள்ளத்தில் திளைத்து நின்றவர் திருநாவுக்கரசு நாயனாராவார். கைலை மலையில் இறைவனுடைய திருக்கோலத்தைக் காண ஆவலுடையவராக சென்ற அப்பர் பெருமான் இறைவனுடைய அருள் ஆணையின்படி பொய்கையுள் மூழ்கி திருவையாற்றில் ஒரு வாவியின்மேல் வந்து எழுந்தனர்.

கரையேறித் திருக்கோவிலை அடையுமுன்னர் நாயனார் ''காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன'' கண்டார். சரம், அசரம் ஆகிய எல்லாப் பொருட்களையும் ஆண், பெண் என்கிற பகுப்பில் கண்டு அவற்றில் ''சத்தியும் சிவமுமாம் சரிதை'' கண்டு, அப்பர் பெருமான் இறைவனுடைய திருப்பாதம் கான்கிறார். கண்டு அறியாதன காண்கின்றார்.

''மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மக
ளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின்
புகுவேன்
யாதுஞ் சுவடுபடாம லையா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன் கண்டேன
கண்டே னவர்திருப் பாதங்; கண்டறி யாதன
கண்டேன்'.

நாவுக்கரசர் பெருமான் அகில சராசரமும் சிவமும் சத்தியுமாக நிற்கக் கண்டார். முதலில் கண்ட வேற்றுமைகள் மறைகின்றன. காண்பிப்பானும் காணப்படும் பொருளும் இணைந்து நிற்கும் நிலை. காண்பான் தனித்து நின்று பார்க்கும் நிலையாகும். பரம்பொருளின் திருப்பாதங்களின் காட்சி



மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்தைச் சார்ந்த அன்பு இல்ல மாணவர்களுக்குச் சீருடைகள் மற்றும் பள்ளிப் பைகளை அரிமா பெண்கள் சங்கம் மற்றும் காயிதே மில்லத் அரசினர் மகளிர் கல்லூரி சார்பில் வழங்கும் விழா இனிதே நடைபெற்றது. ஆசிரியர் தேர்வு வாரியத் தலைவர் திரு கு. ஆளுடைய பிள்ளை ஐ.ஏ.எஸ்., பொதுப் பணித்துறைச் செயலாளர் திரு டி. முருகராஜ் ஐ.ஏ.எஸ்., கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் டாக்டர் சிவபார்வதி, அரிமா பெண்கள் சங்கத் தலைவர் திருமதி தாரா அனந்தராமன், காயிதேமில்லத் அரசினர் மகளிர் கல்லூரி முதல்வர் டாக்டர் வி. வசந்தா, துணை ஆணையர் திரு கு. சிதம்பரம் பி.ஏ., உதவி ஆணையர் திரு பொன்னப்பப்பிள்ளை ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

---

சமயங்களின் நோக்கம் முடிவான பரம்பொருளை அடையும் வழியை தொட்டுக்காட்டுவது தான். அதற்கு மாறாக சமயவாதிகள் தத்தம் சமயங்களே சிறந்தது என்றும் மற்றவை தாழ்ந்தது என்றும் கூறுவார்களேயானால் அவர்கள் குன்றைப் பார்த்து குரைக்கும் நாயைப் போல் இருப்பர் என்பது திருமந்திர உண்மை.

''ஒன்றது பேரூர் வழியா றதற்குள
என்றது போல இருமுச் சமயமும்
நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்
குன்று குரைத்தெழு நாயையொத் தார்களே''

(திருமந்திரம் .1558)

ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்பது உயர்ந்தோர் உணர்வுநிலை. ஓர் அருள் அனுபவமும் ஆகும். சீவராசிகள் பல வடிவங்களில் தோன்றி மறைகின்றன. நாடக மேடையில நடிகன் ஒருவன் பல வேடங்களைத் தாங்கி நடிப்பது போல சீவராசிகள் பிறவிதோறும் பல உடல்களையும, அனுபவங்களையும் தாங்கி நிற்கின்றன ஆனால் அவற்றிற்கு அடிப்படை எங்கும் பரவி ஒளி வீசும் பரம்பொருளேயாகும். ''எல்லாம் உடைய ஈசனே இறைவன்'' என்பார் சேக்கிழார் பெருமான். இந்த உண்மையை உணர்ந்த சாக்கிய நாயனார் துவக்கத்தில் பௌத்த மதத்தைச் சார்ந்தவராயினும் அந்த வேடத்தை நீக்காமலேயே சிவப்பரம்பொருளைத் தன் உள்ளத்தில் வைத்து சங்கரனுடைய திருவடியை மறவாதிருத்தலே உண்மையாகிய உறுதிப் பொருள் என்று துணிந்தவராய் இருந்தார். இதனைச் சேக்கிழார் பெருமான்

''எந்நிலையி னின்றாலு மெக்கோலங் கொண்டாலும்
மன்னிய சீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருளென்றே
துன்னியவே டந்தன்னைத் துறவாதே தூயசிவந்
தன்னைமிகு மன்பினான் மறவாமை தலைநிற்பார்''


(திருத்தொண்டர் புராணம்)

இறை இன்பத்தில் திளைத்து நிற்கும் உயிர் பிரபஞ்சத்தில் முழுமையைக் காண்கின்றது. ஒளிமயமான உணர்வு நிலையில் பேதங்கள் மறைகின்றன. புல், செடி, கொடிகளிலிருந்து தேவர் வரை இறைவனின் அருளுக்கு எடுத்துக்காட்டாகவே தோன்றுகின்றன. இந்த நிலையில் நான், எனது என்கின்ற நினைப்பு நீங்கி நம்மை பிறப்பு, இறப்புச் சூழலில் அழுத்தும் வினைப்பயன்களின் தன்மை ஆற்றல் அற்றதாக மாறுகிறது. நாம் காலனுக்கு அச்சப்பட வேண்டியதில்லை. 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்கிற உணர்வு தானாகவே நம்முள் புகுந்து கொள்கின்றது. இதையே நினைந்து உய்வடைவோமாக.

(திருமந்திரம்..2104)

**''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே''**

**(திருமந்திரம்-2104)**



# கம்பரின்
# இராமாவதாரம்

டாக்டர் த. அமிர்தலிங்கம் **[22]**

பரத சத்ருக்கனர்கள் அளவிலாத அவர்தம் யானை, குதிரை, தேர் எனும் முப்படை வீரர் களோடு கேகய நாட்டிலிருந்து புறப்பட்டு ஏழு நாட்கள் இடைவிடாமல் பயணம் செய்து எட்டாம் நாள் கோசல நாட்டின் எல்லையை வந்தடைகிறர்ர்கள். எவ்வளவு ஆர்வத்தோடு அவர்கள் கேகய நாட்டிலிருந்து புறப்பட்டார்களோ, அவ்வளவு அதிர்ச்சியும் அவர்களுக்குக் கோசல நாட்டில் கர்த்திருக்கிறது.

வளமையின் செழுமை காட்டவேண்டிய வயல்கள் எல்லாம் வாடி வதங்கியிருக்கின்றன. மரங்களில் பறிப்பார் இன்றிப் பழங்கள் பழுத்து அழுகியிருக்கின்றன. மலர்களும் அவ்வாறே கொய்வார் இன்றிச் செடிகளில் பாதி, மண்ணில் பாதியுமாக வாடியிருக்கின்றன. இவற்றை எல்லாம் காணும் பரதசத்ருக்கனர்கள் ஏன் இப்படி நாடு இருக்கிறது என்பதாக ஐயுறுகிறார்கள்.

நகர்ப்புறங்கள் இவ்வாறு களையிழந்திருக்க அயோத்திநகரின் உட்புறமும் மக்கள் நடமாட்டம் இன்றி வீதிகள் யாவும் வெறிச்சோடியிருக்கக் காண்கிறார்கள். அங்கொருவர் இங்கொருவராகத் தென்படுவோர் முகங்களிலும் ஒரு சிறிதும் மலர்ச்சியில்லை. மாட மாளிகைகளில் கொடிகள் பறக்கக் காணோம். கொடைமுரசுகளின் முழக்கம் கேட்கக் காணோம். மங்கல பாடகர்கள் துதிபாடகர்கள் முழக்கமும் இல்லை. யானைக்கூட்டங்களையும் நவநிதிகளையும் கொள்ளை கொண்டு வருவதைப் போல பரிசாகப் பெற்று வரும் திரளான கலைஞர்கள் கூட்டமும் மறையவர்கூட்டமும் காணோம். தேர்களும், குதிரைகளும், யர்னைகளும், சிவிகைகளும் ஓயாமல் ஓடிக் கொண்டிருக்கக் கூடிய சாலைகள் யாவும், நீரில்லாத வறண்ட நதியிடம் போல வெறிச்சோடிக் கிடக்கக் காணும் பரதசத்ருக்கனர்கள் கொடிய துயரம் ஏதோ ஒன்று நேர்ந்து விட்டிருக்கிறது என்பதாக உணர்ந்து அது என்னவாக இருக்கும் என்று உள்ளம் பிசையத் துடிக்கிறார்கள். ''தம்பி! நம் அயோத்திக்கு என்ன நேர்ந்ததோ தெரியவில்லையே!'' என்று பரதன் கூற ''ஆம் அண்ணா! திருமகள் நீங்கிய பாற்கடல் போலவே பொலிவிழந்து கிடக்கிறது அயோத்தி'' என்கிறான் சத்ருக்கனன்.

''தந்தை தசரதர் உயிருக்கு ஏதாவது நேர்ந்து விட்டிருக்குமோ?'' என்று ஐயப்பட்டு இருவரும் தசரதரின் அரண்மனைககு ஓடிப்போய் பார்க்கிறர்ர்கள். அங்கு தசரதர் இல்லாதது அவர்கள் ஐயத்தை மேலும் அதிகப்படுத்துகிறது. தசரதர் வழக்கமாக எங்கெல்லாம் இருப்பாரோ அங்கெல்லாம் தேடிப் போய் பார்க்கிறார்கள். இவர்களைக் காணும் அரண்மனைக்காவலாளிகளும் இவர்களிடம்

முகம் கொடுத்துப் பேசாமல் விலகிச் சென்று விடச் சொல்லொணா வேதனையில் பரத சத்ருக்கனர்கள் கலங்குகிறார்கள். அப்பொழுது அங்கு வரும் தாதிப் பெண் ஒருத்தி பரதனை அவன் தாய் அழைப்பதாகக் கூற, பரதனும் கைகேயியின் மாளிகைக்கு விரைகிறான்

தாய் கைகேயியைக் கண்டதும் தாள் பணிந்து வணங்குகிறான் பரதன். அவளும் பரதனைக் கட்டித் தழுவக் கொண்டவளாய் ''என் தாய் தந்தையர் நலம் தானே'' என்று வினவுகிறான். 'ஆம்' எனத தலையை மட்டுமே அசைகவும் பரதன் தன உள்ளம் துடிக்க ''என தந்தை நலம் தானா தாயே'' என்று வினவுகிறான். ''உன் தந்தை தேவர்கள் கைதோழ வானகம எய்தினார். நீ ஒன்றும் அதறகாக வருந்தாதே' என்று கவலை சிறிதும் இல்லாதவளாய், கண்ணீரும் சிந்தாதவளாய் கைகேயி கூறும் சேதி பேரிடியாய் பரதனைத் தரையிலே சாய்க்கிறது.

தந்தை மறைந்தார் என்ற கொடிய சேதியைத் தாங்கிக் கொள்ளவே முடியாத பரதன் மனம் பொருமிப் புலம்பி அழுகிறான். ''தருமம் வேரொடு சாய்ந்து விடடதே! இனி மக்களுக்கு அருள் செய்ய யார் இருக்கிறார்கள்? தநதையே! நீங்கள் எப்படி எங்களைக் கேளாமல வானகம் போகலாம்? மற்றவர்கள் விருப்பங்களை நிறைவேற்றவே காலமெல்லாம் பாடுபட்ட நீங்கள், இப்பொழுது மட்டும் எப்படி எங்கள் விருப்பத்தை அறிந்து கொள்ளாமல் ஆவி துறக்கலாம்? எங்களின் பொருட்டு இல்லை என்றாலும் இராமருக்காக வேனும் நீங்கள் உயிர்தாங்கி வாழ்ந்திருந்திருக்கலாமே! மேருமலையினும் மேலான சிவ தனுசை சிதைவு செய்த ஸ்ரீராமரைப் பிரிய உமக்கு எப்படி மனம் வந்தது? உம் மக்கள் நாங்கள் இங்கே உமது வெண்கொற்றக் குடை நிழலுக்காக ஏங்க, நீங்கள் கற்பகமர நிழலுக்கு ஆவல்கொண்டு விண்ணகம் செல்லலாமா? சம்பரா சூரனை வென்று அந்நாளில் தேவர்களைக் காத்து இரட்சித்த நீங்கள் இன்று வேறெந்த அசுரனை வெல்வதற்காக விண்ணகம் சென்றீரோ? அவனி ஆளும் ஆணைச் சக்கரத்தை இதுகாறும் தாங்கிக் களைத்து போய், அதை இனி இராகவனே தாங்கட்டும் என்றுதான் ஆவி துறந்தீரோ? இராமருக்கு மணி மகுடத்தைச் சூட்டி அந்தப் பட்டாபிசேகக் கோலத்தையும் தரிசிக்கும் பாக்கியம் பெற்ற பிறகு நீங்கள் விண்ணகம் சென்றிருக்கக் கூடாதா'' என்று தந்தையின் மறைவு குறித்துப் பலவும் கூறிப் புலம்புகிறான் பரதன்.

'ஏழுயர் மதக்களிற் றிறைவ ஏகினை
வாழிய கரியவன் வறியன் கையெனப்
பாழியம் புயத்துநின் பணியின் நீங்கலா
ஆழியை இனியவற் களிக்க எண்ணியோ?'
''பற்றிலை தவத்தினிற் பயந்த மைந்தற்கு
முற்றுவ கவித்தது முறையின் எய்திய
கொற்ற நன்முடிமணக் கோலம் காணவும்
பெற்றிலை போலுநின் பெரிய கண்களால்'

எனப் பரதன் புலம்புவதில் தசரதருக்குப் பின் பாராள வேண்டியவன் இராமனே என்பதில் பரதனுக்கிருக்கும் மனத்தெளிவை நமக்குக் கவிச்சக்கரவர்த்தி கம்பர் தெற்றெனப்புலப்படுத்தி விடக் காண்கிறோம்.

தந்தையின் மறைவு குறித்து பரதன் இவ்வாறு கதறி அழ, அவனைத் தேற்றவோ, அவனுடன் சேர்ந்து கண்ணீர் விடவோ கைகேயி சித்தமாக இருக்கின்றாளா என்றால் இல்லவே



இல்லை. ''பரதன் பட்டாபிசேகத்துக்காகவே இத்தனைக் காரியங்களையும் எத்தனை சிரமப் பட்டு தான் முடித்திருக்க. இராமர் பட்டாபிசேகம் காணாமல் போய்விட்டாரே தசரதர் என்று புலம்பிக் கொண்டிருக்கிறானே, இந்த அறிவிலி பரதன்!'' என்றே கைகேயி இப்பொழுது மனத்திற்குள் சிந்தித்துப் பரதனை குறைபட்டுக் கொண்டாலும் அதில் ஒன்றும் ஆச்சர்யமிருக்க முடியாது.

தந்தையின் மறைவு குறித்து பரதன் தானே அழுது புலம்பி, தானே தன்னையும் ஆறுதல் படுத்திக் கொண்டு விடுகிறான். ''தந்தையும் தாயும் எனக்குத் தெய்வமுமான இராமபிரானுடைய திருவடிகளைக் கண்டு வணங்கினால் அன்றி என் துயரம் மாறாது'' என்ற தெளிவிற்கும் வருகிறான் பரதன்.

''எந்தையும் தாயும் எம்பிரானும் எம்முனும்
அந்தமில் பெருங்குணத்து இராமன் ஆதலால்
வந்தனை அவன்கழல் வைத்த போதலால்
சிந்தைவெங் கொடு துயர் தீர்கலா தென்றான்''

என்று கூறி அந்தமில் குணத்து இராமன்பால் காதல் கொண்டவனான அந்தமில் குணத்துப் பரதன், இராமருடைய மாளிகைக்குப் புறப்பட, கைகேயி தடுக்கிறாள். ''பரதா! இராமன் இப்போது இங்கே இல்லை. அவன் தன் மனைவியுடனும், தம்பியுடனும் காட்டிற்குப் போய்விட்டான்.''

இச்செய்தியைக் கைகேயி கூற, ஒரு கூடை நெருப்பை அள்ளி அப்படியே தன்வாய்க்குள் திணித்து விட்டதைப் போன்ற வேதனையில் வெந்தே போய் விடுகிறான் பரதன், 'ஐயோ! இன்னும் நான் கேட்கக்கூடியதாய் எத்தனை கொடிய செய்திகள் இருக்கின்றனவோ?'' என்று கதறியழவும் செய்கிறான் பரதன். ''இராமன் கானகம் போனதால்தான் தந்தை வானகம் ஏகினாரோ'' என்பதாக ஓர் ஐயமும் இப்போது பரதனுடைய சிந்தையில் துளிர்விட்டு, வலுப்பெறுகிறது. பரதன் கைகேயியிடம் வினாக்களை அடுக்கு

கிறான். ''தந்தை வானகம் போனது இராமர் வனம் போவதற்கு முன்பா? பின்பா? இராமர் ஏன் வனம் போனார்? இராமர் வனத்திற்கு விரட்டப்பட, அவர் அப்படி என்ன குற்றம் புரிந்தார்?''

பரதனுக்கு மகுடம் சூட்டும் ஆசையில் எல்லாம் தானே செய்ததாகக் கூறினால் மகன் மனம் பூரித்துப் போய் விடுவான் என்று எண்ணிக் கொள்ளும் கைகேயி மிகுந்த மனமகிழ்ச்சியோடு அவனுக்கு நிகழ்ந்ததை விவரிக்கின்றாள்.

''வாக்கினால வரம்தரக் கொண்டு மைந்தனைப்
போக்கினேன் வனத்திடைப் போக்கிப் பாருனக்கு
ஆக்கினேன் அவன்அது பொறுக்கலா மையால்
நீக்கினான் தன்னுயிர் நேமி வேந்தென்றாள்''

தன் சாதனையைக் கேட்டு மனம் பூரித்துப் பரதன் தன்னைப் போற்றிக் கொண்டாடுவான் என்று எதிர்பார்த்த கைகேயி, மகனின் முகம் காட்டிய சினக்குறிப்பைக் கண்டு பயந்து நடு நடுங்கியே விடுகிறாள். கன்னங்கள் துடிக்க, கண்கள் இரத்தசிவப்பு கொள்ள, மூச்சில் நெருப்பு பறக்க, கைகள் இரண்டையும் சேர்த்து இடிபோல முழக்கி ''தாயா நீ?'' என்று கொதித்துக் கைகேயியைப் பற்றிக் கொன்று விடும் அளவிற்குக் கோபத்தின் உச்சிக்கே போய்விடுகிறான் பரதன்.

''என் தமையன் கானகம் போக, என் தந்தை வானகம் போக வரம் கேட்ட நீர் தாயா? வரம் கேட்ட உம் வாயை நான் கிழித்துவிடுகிறேன். ஒரு நொடியில் உம்மை அடித்துக் கொன்றே விடுகிறேன். தாய் என்ற பாசம் ஒன்றும் இப்போது என்னைத் தடுக்கவில்லை. உம்மைக் கொன்றால் இராமன் என்னை கோபிப்பான் என்பதாலேயே உன்னை நான் உயிரோடு விடுகிறேன். சூரிய குலத்தின் வழிவழி மரபைச் சிதைத்து எனக்கு அயோத்தியில் மணிமகுடத்தை சூட்டுக என்று நான் எப்போதாவது கேட்டதுண்டா? கேகய நாட்டிற்குப் போவதாக பரதன் போக்கு காட்டித் தன் தாயைக் கொண்டு ஒரு நாடகமாடி தமையனைக் காட்டிற்கும், தந்தையை இடுகாட்டிற்குமாக விரட்டிவிட்டான். பரதனைப் போன்ற சூழ்ச்சிக்காரன் உலகில் வேறெங்கும் இல்லை என்று பலரும் பேசும் அளவிற்கு என்னைப் பழிகாரன் ஆக்கிவிட்டாயே! பாவி! உம் வயிற்றிலா வந்து நான் பிறக்க வேண்டும்? நீர் தாயா இல்லை பேய்! இன்னும் என்னென்ன கொடுமைகள் உம்மால் எனக்கு வந்து சேரப் போகின்றனவோ? தெரியவில்லையே!'' என்று பரதன் தன் தாயை வசைபாடி சாடுகிறான்.

''மாண்டனன் எந்தை; என்றன்முன மாதவம்
பூண்டனன நின்கொடும் புணர்ப்பினால் என்றால்
கீண்டிலன் வாய்அது கேட்டுநின்றயான்
ஆண்டனன் அன்றோ அரசை ஆசையால்''

''நீ இனம் இருந்தனை யானும் நின்றனென்
ஏனும் மாத்திரத்தில் எற்று கின்றிலேன்
ஆயவன் முனியும் என்றஞ்சி னேன் அலால்
தாயெனும் பெயர்எனைத தடுக்கற் பாலதோ?''

''நோயீர் அல்லீர்நுங் கணவன்தன் உயிர்உண்டீர்
பேயீரே நீர்இன்னும் இருக்கப் பெறுவீரே!
மாயீர் மாயா வன்பழி தந்தீர் முலைதந்தீர்
தாயீரே நீர்இன்னும் எனக்கென் தருவீரே''.

பாலினை ஊட்டிய தன் தாயே நஞ்சையும் ஊட்டிவிட்டதாக வசைபாடும் பரதன், இப்போது கைகேயி ஊட்டிய நஞ்சைத் தான் உண்ணப் போவதில்லை; மாறாக துப்பிவிடப் போவதாகக் கூறுகிறான். ''உண்ணாத நஞ்சால் எப்படி உயிரைக் கொல்ல முடியும்? நீ வாக்கினால் ஆக்கிய மகுடம் அது என்னுயிர் கொல்லும் நஞ்சு. அதை நான் உண்ணாமல் ''தூ'' என உமிழ்ந்து நானும் என் இராமனைப் போலவே இனி தவமே புரியப் போகிறேன். பன்னருங் கொடுமனப் பாவியாகிய உன் முகத்தில் இனி நான் விழித்தாலும் அது பாவமே. இனி எனக்குக் கோசலைதான் தாய். அவளுடைய பொன்னடிகள் தொழுதால் தான் என்துயரம் தீரும்'' எனக்கூறிக் கோசலையின் மாளிகைக்கு விருட்டெனப் புறப்படுகிறான் அருங்குணச் செம்மல் ஆகிய பரதன்.

''இன்னணம் இளையவன் விளம்பி யானுமிப்
பன்னருங் கொடுமனப் பாவி பாடிரேன்
துன்னருந் துயர்கெடத் தூய கோசலை
பொன்னடி தொழுவன் என்றெழுந்து போயினான்.

(தொடரும்)

## வாசகர் எண்ணங்கள்

கலைஞரின் குறளோவியக் காவியம் கவினுறு தெய்வாம்ச தேவாமிர்தம்.

மாண்புமிகு தமிழக முதல்வராம், டாக்டர் கலைஞர் அவர்களின் குறளோவியக் காவியக் கட்டுரை
அருளோவியக் களஞ்சியத் தேனூற்றே!

—ச. சிவனருட்செல்வன்,
அரசு கலைக் கல்லூரி,
திருவண்ணாமலை.

† † †


அறிவாக்க பஞ்சாமிர்த கட்டுரையளித்த ஆணையர் அவர்கள் வாழ்க! வாழ்க!

குருவருளும் திருவருளும் என்று
நிறைவருள் கட்டுரையால் நமக்கு
இறையருள் நமக்கிட்டபடி ஆண்டவரால்
குருவான இறையருளால் கிடைக்குமென

அரிய கருத்திதனையே அறநிலைய
ஆணையர் இராமதாஸ் அண்ணலார்
அங்கையின் நெல்லியென அழகுபட
ஆக்க ஊக்கமாய் அருளினார்.

கவிதைச் செல்வமணி,
திலகம் ஈஸ்வரன்,
திருமீயச்சூர், தஞ்சை மாவட்டம்


வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம். M.A.,Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002



திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி ஆலயத்தில் நடைபெற்ற பொது விருந்து விழாவில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திருமிகு நாஞ்சில் மனோகரன் எம்.ஏ. அவர்கள் கலந்து கொண்டார். சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஷீலாராணி சுங்கத் ஐ.ஏ.எஸ், உதவி ஆணையாளர் திரு இராஜநாயகம் எம்.ஏ.பி.எல்., ஆகியோர் உடன் உள்ளனர்.

திருக்குற்றாலம் அருள்மிகு குற்றாலநாதர் ஆலயத்திற்கு மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு கே.பி. கந்தசாமி எம்.ஏ. அவர்கள் வருகை புரிந்து ஆலயத்தைப் பார்வையிட்டார்கள். அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு வ.ராமதாஸ் ஐ.ஏ.எஸ். துணை ஆணையாளர் திரு சுப.சீதாராமன், செயல் அலுவலர் திரு நாராயணன் நம்பி ஆகியோர் உடன் உள்ளனர்.







மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்தில் சுதந்திரத் திருநாளில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்து விழாவில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு கே.பி. கந்தசாமி எம்.ஏ. அவர்கள் கலந்து கொண்டார்கள். கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் டாக்டர் செல்வி சிவ பார்வதி, துணை ஆணையாளர் திரு கு. சிதம்பரம் பி.ஏ., ஆலய உதவி ஆணையாளர் திரு பொன்னப்பப்பிள்ளை பி.காம்.,பி.எல். ஆகியோர் உடன் உள்ளனர்.